மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 3 | 15 - 3 - 55 | இதழ் 22

தமிழ் நாவீறுபடைத்த நாவலர்

ச. சோமசுந்தர பாரதியார்

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

பேசமுடியாமற்போன ஒரே கூட்டம்

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடக் கழகம் ஆகிய அமைப்புகள் தோன்றுவதற்கு முன்னால், நீதிக்கட்சியில் சார்ந்திருந்து, பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த போது, தென்ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அவலூர்ப்பேட்டைக்கு ஒரு முறை அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவலூர்ப்பேட்டை வைதீகப் பெரியவர்கள், பணக்காரர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்துவந்த காலம் அது. பகுத்தறிவியக்கக் கொள்கைகளிலே பற்றுகொண்ட ஒருசில இளைஞர்கள் அறிஞர் அண்ணா அவர்களை வரவழைத்து அவ்வூரில் எப்படியேனும் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்திவிட வேண்டும் என்று முயன்று அரும்பாடுபட்டுக் கூட்டினார்கள். அறிஞர் அண்ணாவும் இசைந்தார்கள்.

அவலூர்ப்பேட்டையில் மணியக்காரராய் இருந்த பெரியவர் ஒருவர் தம்மைப் பொருட்படுத்தாமல் 'பொடியர்'கள் பொதுக்கூட்டம் கூடுகிறார்களே என்பதைக்கண்டு சினங்கொண்டு, எப்படியேனும் கூட்டத்தை நடத்தவொட்டாமல் செய்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

பொதுக்கூட்டம் ஆரம்பமாகி அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்திருக்கும் போது, அந்த மணியக்காரர் கூட்டத்திடை வந்து நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டு, அவர் முன்னரே ஏற்பாடு செய்துவைத்திருந்தபடி பறையடிப்போரைப் பார்த்து, "தப்பட்டையை அடியுங்கடா..." என்று கட்டளை பிறப்பித்தார். அவ்வளவுதான்! கூடியிருந்தோர் காது செவிடுபடும்படியாகப் பறையடிப்போர் பறையொலி கிளப்பினர், அறிஞர் அண்ணாவால் ஏதும் பேசமுடியவில்லை. "நான் சிறிது நேரத்தில் முடித்துக்கொள்கிறேன். அதைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள்!" என்று அண்ணா அவர்கள் அந்த மணியக்காரரை கேட்டுக்கொண்டார்கள். "அதெல்லாம் முடியாது! அடியுங்கடா......" என்று மணியக்காரர் மேலும் கடுமையாகக் கட்டளையிட்டார்,

" அதிக நேரம் பேசப்போவதில்லை, சிறிது நேரந்தான்." என்றார் மீண்டும் அண்ணா அவர்கள்.

" யாரைக் கேட்டுக்கொண்டு பேசவந்தாய்? என்னையா கேட்டுக்கொண்டு வந்தாய்? இல்லையே?" என்றார் மணியக்காரர்.

" பொதுமக்கள் கூடிவிட்டார்கள். இவர்களை எழுந்துபோகச் சொல்லுவது உங்கள் ஊருக்கு நல்லதல்ல. இப்பொழுதுதான் கேட்கிறேன், பேசவிடுங்கள்!" என்று அண்ணா அவர்கள் கேட்டார்கள்.

" அப்படியானால் ஐந்து நிமிடம் பேசு" என்று அவர் அனுமதி தந்தார். அவரது கட்டளையின்பேரில் தப்பட்டை ஒலி நின்றது. அண்ணா அவர்கள் பேச்சைத் தொடங்கி பேசிக்கொண்டேயிருந்தார்கள். ஐந்து நிமிடங்கள் ஆனவுடனேயே பறையொலி எழுப்பும்படி மணியக்காரர் கட்டளையிட்டுவிட்டார். பறைகள் பெரும் ஓசை கிளப்பின. அண்ணா அவர்கள் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் மணியக்காரர் கூட்டம் நடத்த அனுமதிக்கவில்லை. மணியக்காரரை எதிர்த்துப் பேசும் ஆற்றல் அப்பொழுது யாருக்கும் ஏற்படாததால், எல்லோரும் வாளா இருந்துவிட்டனர். கூட்டம் கூட்டிய இளைஞர்கள் அப்பொழுது அண்ணா அவர்கள் எதிரில் வர அஞ்சி மறைந்துவிட்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் பேசமுடியாமல் இறங்கிய ஒரே மேடை அதுதான்.

மறுநாள் காலையில் சிற்றுண்டி அருந்த ஒரு உணவு விடுதிக்கு அவ்வூரில் அறிஞர் அண்ணா அவர்கள் சென்றபோது, அங்கிருந்த மணியக்காரர் அண்ணாவை வரவேற்றுச் சிற்றுண்டி முதலியவைகளை வாங்கி வழங்கினாராம். முதல் நாள் இரவுக் கூட்டம் என் தன்னால் நிறுத்தப்பட்டது என்பதற்கான காரணத்தை அவர் சொல்லும்போது, கூட்டத்தை நடத்தவிட்டால், இளைஞர்கள், எப்பொழுதும் தம்மை மதிக்காமல் போய்விடுவார்கள் என்றும், அவர்களுக்கு அத்து இருக்கவேண்டும் என்பதற்குத்தான் கூட்டத்தைத் தாம் நிறுத்தினதாகவும் கூறினாராம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 - 3 - 55 செவ்வாய்க்கிழமை

வடக்கு வளரத் தெற்கு தேய்கிறது !

1955-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையை, ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்கும் கண்டனத்திற்குரிய நாளாகக் கொள்ளவேண்டும் என்று, சென்ற திங்களில் பேரூரில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் முடிவு செய்ததற்கிணங்க, நாடெங்கணும் உள்ள தி. மு. க. கிளைகள் கண்டனக்குரலை உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் எழுப்பிக் காட்ட ஆர்வத்தோடு அருஞ்செயல்களாற்றும் என்று கருதுகிறோம்.

வடநாட்டை வாழவைக்கவும், தென்னாட்டைத் தேயவைக்கவும் ஆன மனப்போக்குடன் திட்டங்கள் தீட்டியும், செயல்களாற்றியும் வரும் இந்தியப் பேரரசை உணரவைக்கவும், தென்னாட்டைச் சுரண்டும் வடநாட்டு வணிகக் கோமான்களுக்கு எச்சரிக்கை புரியவும், உரிமைக்குரலை எழுபபும்படி சென்னை அரசாங்கத்தைத் தூண்டச் செய்யவும், உறங்கிக் கிடக்கும் தென்னாட்டு மக்களை விழிப்புறச் செய்யவும், திராவிட நாட்டைத் தனி நாடாக்கும் விடுதலை வேட்கையை அறிவுப்படையினர் — ஆற்றல் படையினரின் உள்ளங்கள்தோறும் ஊட்டவுமே தி. மு. கழகம் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளைக் கொண்டாட முனைந்துள்ளது.

சென்ற ஏழரை ஆண்டுக்காலத்தில், இந்தியப் பேரரசைச் சுதந்திர ஆட்சியின்பேரால் கட்டி ஆளும் வட இந்தியக் காங்கிரசு ஆதிக்கக்காரர்கள் வகுத்துள்ள, பொதுவாக எல்லாத் திட்டங்களும் குறிப்பாக முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய எல்லாமும் வடநாட்டைச் செல்வ நிலையில் வளரவைக்கவும், தென்னாட்டைப் புறக்கணிக்கவுமே செய்கின்றன எனபதைக் கூர்மதிபடைத்தோர் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

புதிய பெரும் தொழிற்சாலைகள், பெரும் பெரும் மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், நாடு—நகர வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய எல்லாமும் வடநாட்டை வளமாக ஆக்கும் முறையில்தான் வகுக்கப்பட்டிருக்கின்றன. வடநாடு இந்தியப் பேரரசுக்குத் தான் செலுத்தும் வரிகளைவிட மிக்கபலனை இந்தியப் பேரரசினிடத்தில் பெறுகிறது; ஆனால் தென்னாடோ மிக்க வரிகளைச் செலுத்திக் குறைந்த அளவு பலனையே பெறுகிறது. வடநாட்டுத் திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகையையும், தென்னாட்டுத் திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், யானைக்கும் பூனைக்கும் தோற்றத்தில் காணப்படும் வேற்றுமையைக் காணலாம். எடுத்துக்காட்டாகச் சில முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் மேற்கூறிய உண்மை தெளிவாக விளங்கும்.

தென்னாட்டில் நிறைவேறும் திட்டங்கள்

துங்கபத்திரா அணைக்கட்டுத் திட்டம் சுமார்	ரூ.	18	கோடி
கீழ்பவானி ,,	,,	4	,,
மணிமுத்தாறு ,,	,,	$3\frac{1}{4}$	,,
மாலம்புழை ,,	,,	1	,,

வடநாட்டில் நிறைவேறும் திட்டங்கள்

தாமோதரப் பள்ளத்தாக்குத் திட்டம் சுமார்	ரூ.	140	கோடி
பக்ரா நங்கல் அ. திட்டம்	,,	120	,,
ஹிராகுட் அ. திட்டம்	,,	68	,,
மச்சகுண்டு அ. திட்டம்	,,	45	,,

இவற்றைத்தவிர வடநாட்டில் மாயூராக்ட்சித் திட்டம் (வங்காளம்), கீழ்த்தப்திப் பள்ளத்தாக்குத் திட்டம் (பம்பாய்), சாம்பல் திட்டம் (மத்திய பாரத்—இராசச்தான்), கோசித் திட்டம் (பீகார்—நேபால்), கொயனா திட்டம் (பம்பாய்), ரீகண்டு திட்டம் (உத்தரப் பிரதேசம்) போன்றவைகளும் நிறைவேறிவருகின்றன.

நாட்டின் தொழில்வளத்தையும், வாழ்க்கை வளர்ச்சியையும் நிர்மாணிக்கவல்ல பெரும் பெருந் தொழிற்சாலைகளையெல்லாம் வடநாட்டில்தான் மத்திய அரசினர் துவக்கியிருக்கிறார்கள். ரூ. 55 கோடி திட்டத்தில் சித்தரஞ்சன் இரயில்வே என்ஜின் தொழிற்சாலையும், ரூ. 23 கோடி திட்டத்தில் சிந்திரி உரத் தொழிற்சாலையும், ரூ. 25 கோடி திட்டத்தில் பென்சிலின் தொழிற்சாலையும், ரூ 70 கோடித் திட்டத்

தில் முன்பு ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையும், இப்பொழுது ரசியாவின் உதவியோடு ரூ. 140 கோடி திட்டத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையும் ஆகிய இவை போன்ற பலவும் வடநாட்டிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு பெரும் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளை வடநாட்டிலேயே துவக்கத் திட்டம்போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாடு குறிப்பாகச் சென்னை மாநிலம் ஏமாந்துதான் போகும் என்பதற்கான அறிகுறி தென்படுகிறது. ரூ. 10 கோடி பெறுமான எட்டு நீர்ப்பாசனத் திட்டங்களைத்தான் சென்னை அரசியலார் சிபாரிசு செய்துள்ளனராம் இவற்றில் எவ்வளவுக்கு அனுமதியளிக்கப்படுமோ, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் கிடைக்கும் மிக்க வருவாயில் நான்கில் மூன்று பங்கினைத் தான் எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொல்லி மத்திய அரசாங்கம் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் சார்பாகவும் தனிப்பட்டவர்களின் சார்பாகவும் பொருளுற்பத்தித் தொழிற்சாலைகள் ஏராளமான அளவில் வடநாட்டிலேயே ஏற்படுவதற்கான வழிவகைகளை மத்திய அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. இந்தியத்துணைக்கண்டத்தில் பிரிட்டனும், அமெரிக்காவும் செய்துவந்த வாணிகங்களைச், சிறுகச் சிறுக வடநாடு கைப்பற்றிக்கொண்டு, தனக்கே ஏகபோக உரிமையாக்கிக்கொண்டு வருகிறது. மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வடநாட்டு வணிகக்கோமான்கள் பக்கந்தானிருக்கின்றது. இப்பொழுதே தென்னாட்டவர்யாரும் பொருளுற்பத்தித் துறையிலேயோ அல்லது வாணிகத்துறையிலேயோ தலைதூக்கமுடியாதபடி ஆங்காங்கு வடநாட்டு வாணிகர்கள் மட்டந்தட்டிவிட்டுத், தங்கள் வாணிகத்தைப் பெருக்கி வருகிறார்கள். இந்த நிலை நீடித்துக் கொண்டேபோனால், தென்னாடு, என்றென்றும் மீளமுடியாதபடி வடநாட்டுக்கு அடிமையாகத்தான் வேண்டிவரும். இந்த நெருக்கடி நிலையிலிருந்து தென்னாட்டை மீட்க வேண்டுமானால், அதற்கான ஒரே அருமருந்து, தென்னாட்டை—திராவிடநாட்டைத் தனி நாடாக அதாவது மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட திராவிடக் கூட்டாட்சி நாடாக ஆக்குவதுதான். அதைத்தவிர வேறு வழி ஏதும் இப்போதைய அரசியல் சூழ்நிலையில் இல்லை என்று கூறலாம்.

திராவிடத்தில் எல்லா இயற்கைவளங்களும் இருக்கின்றன; ஆனால் அவற்றைப் பயன்படுத்தும் உரிமையும், வழியும், வகையும் அற்று திராவிடம் தவிக்கிறது. "நாடென்ப நாடா வளத்தன" (புறத்தே போய் தேடவேண்டாத வளத்தினை உடைய நாட்டை நாடு என்று சொல்லுவர் நூலோர்) என்று திருவள்ளுவர் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த இலக்கணத்துக்குத் திராவிடம் எல்லா வகையில் இயற்கையில் பொருந்திவருவதாகும். இயற்கை வளத்தையெல்லாம் செயற்கை முறையில் பயனபடுத்தத் தெரியாதவர்களாய்த் திராவிடத்தார்கள் வாழுவதால்தான், திராவிடம் மிகத் தாழ்ந்திருப்பதோடு, வடநாட்டிற்கு அடிமைப்பட்டும் கிடக்கிறது. 20—3—55-ஆம் நாள் எழுப்பப்படும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக்குரல் தென்னாட்டு மக்களுக்குப் புதியதொரு எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும் தரும் என்று கருதுகிறோம்.

வாழ்க திராவிடம்!

அட்டைப்படம்

தமிழ் நாவிறுபடைத்த ச. சோமசுந்தர பாரதியார்

தாம் ஆராய்ந்து கண்டறிந்த முடிவை அழுத்தந் திருத்தமாகவும், யாருக்கும் அஞ்சாமலும்—பணியாமலும், எதற்கும் நெளியாமலும்—வளையாமலும் எடுத்துக்கூறும், உள்ள உரம் வாய்ந்த, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தன்மதிப்புக்காக்கும் தமிழ்ப் பெரும் புலவர்களிலே ஒருவர்தான் **நாவலர் ச. சோமசுந்தரபாரதியார்.** அவர் வாழும் நாட்களிலேயே அவரது அருமை பெருமைகளை அறிந்து போற்றிப் பாராட்டி, அவருக்கு 'டாக்டர்' என்ற 'அறிஞர்' பட்டம் கொடுத்து, அவரைப் பொன்னாடையால் போர்த்தி மகிழும் வாய்ப்பினை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்திக்கொண்டது அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

கல்விச் சிறப்பும், அறிவுத்திறனும், ஆராய்ச்சி மேம்பாடும், சொல்லாற்றலும், வாதிடும் வல்லமையும், ஆழ்ந்த மொழிப்பற்றும் ஒருங்கே பெற்றுவிளங்கும் ஒரு பெரும் புலவராவார் அவர். தமிழ் வாழவும்வளரவும் அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் பலப்பல. இந்தி எதிர்ப்பில் அவர் காட்டிய ஆர்வம் போற்றுதற்குரியது. அவரது தோற்றம், நடையுடை போக்கு, பேச்சு ஆகிய எல்லாவற்றிலும் மறத்தமிழனின் சாயல் படிந்திருக்கும். நாவலர் பாரதியாரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரோடு சேர்ந்து நாமும் பாராட்டுகிறோம்! வாழ்க நாவலர் பாரதியார்!

தொடர்கதை

பனி வெளியில்

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இறந்த குழந்தையை மரணப் பரிசோதனை செய்த டாக்டர் மார்தாண்டம் சாட்சிக் கூண்டில் நின்றார். குலசேகரன் அவரைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தான்.

"குழந்தையின் சவத்தைப் பரிசோதனை செய்தது நீங்கள்தானே!"

"ஆமாம்!"

"குழந்தையின் சவம் கொண்டுவரப்பட்ட நேரம் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளதல்லவா?"

"ஆமாம்!"

"எத்தனை மணிக்கு கொண்டுவரப்பட்டது?"

"சரியாக 1-35 மணிக்கு!"

"மரணப்பரிசோதனை செய்தபொழுது, குழந்தையின் உடலில் ஏதாவது காயம் இருந்ததா?"

"காயம் எதுவும் இல்லை!"

"கழுத்தில் ஏதாவது அழுத்தப்பட்ட அறிகுறி இருந்ததா?"

"கிடையாது!"

"உங்களுடைய பரிசோதனை மூலம் குழந்தை எவ்வளவு நேரத்துக்குமுன் இறந்திருக்குமென்று சொல்லமுடியுமா?"

"குழந்தை ஒன்றரையிலிருந்து இரண்டு மணி நேரத்துக்கு முன் இறந்திருக்கலாம்."

இந்தப் பதில் குலசேகரன் முகத்தில் உற்சாகத்தை நிலைபெறச் செய்தது.

"அதாவது நீங்கள் மரணப்பரிசோதனை செய்தது 1-35 அதிலிருந்து ஒன்றரை அல்லது இரண்டு மணி என்றால், 12-35 லிருந்து 1-05-க்குள் குழந்தை இறந்திருக்கவேண்டும்."

"அநேகமாக அந்த நேரத்துக்குள்தான் இருக்கும்."

"டாக்டர்! மற்றுமொரு முக்கியமான கேள்வி?" குலசேகரன் மிக உருக்கத்துடன் கேட்டான். டாக்டர் மார்தாண்டம் இதைப் போல் பல வழக்குகளில் தனது பரிசோதனை பற்றிச் சாட்சியம் கொடுத்திருக்கிறார். கேள்விகளுக்குப் பதில் சொல்வதில் என்ன கஷ்டமிருக்கப்போகிறது? அதிலும் கூட்டிக் குறைத்து சொல்லவேண்டிய அவசியம் அவருக்குக் கிடையாது, எனவே குலசேகரன் முக்கியமான கேள்வி என்று சொன்னதும் டாக்டர் மார்தாண்டம் சிரித்துக்கொண்டு "நன்றாகக் கேளுங்கள்!" என்றார்.

"குழந்தை இறந்தபின் கடல் அலையில் விழுந்திருக்குமா? அல்லது கடல் அலையில் விழுந்தபின் அது இறந்திருக்குமா?"

"எப்படி இறந்தது என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது."

"அவ்வளவுதான் நான் கேட்பது, நன்றி டாக்டர்!" என்று குலசேகரன் தனது கேள்வியை முடித்துக்கொண்டான்.

அன்று மாலை குலசேகரன் டாக்டர் சஞ்சீவி வீட்டிற்கு வந்தபொழுது, மிகவும் குதூகலத்துடன் காணப்பட்டான். "இன்றைக்கு டாக்டர் மார்தாண்டம் கொடுத்த சாட்சியம் மிக முக்கியமானது! அது கடலலையால் அடிக்கப்படுவதற்கு முன் குழந்தை இறந்ததா, அல்லது இறந்தபின் கடலலையில் விழுந்ததா

என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது. சந்தேகமற நிருபிக்கப்பட்டால்தான் குற்றத்துக்குத் தண்டனை கிடைக்கும். இருக்குமோ இருக்காதோ என்ற சந்தேகம் சிறிதளவு இருந்தாலும் போதும் உடனே சந்தேகத்தின் அனுகூலம் குற்றவாளிக்குத் தரப்படும்.''

குலசேகரன் சொல்வதைத் தங்கமும் டாக்டர் சஞ்சீவியும் மிக உன்னிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"குழந்தை இறந்தபின் அலையில் விழுந்ததா அல்லது அலையில் விழுந்ததால் இறந்ததா என்று எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று தங்கம் கேட்டாள்.

" இதுவரை வந்த சாட்சியங்களில் குழந்தையைச் சகுந்தலா தூக்கி போட்டதை யாரும் பார்க்கவில்லை. குழந்தை கடலோரத்தில் ஒதுங்கிக் கிடந்தது மட்டும் தெரிகிறது. கடலோரத்தில் ஒதுக்கப்பட்டபின் இறந்தாலும், இறந்திருக்கலாம். யாருக்கும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. எனவே குழந்தையை இறக்கச்செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு உடைந்துவிடுமென்று நான் நம்பிக்கையுடனிருக்கிறேன் !" குலசேகரன் சொன்னதை டாக்டர் சஞ்சீவி ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

" அப்படியானால் குழந்தை எப்படி இறந்ததென்று கேட்கமாட்டார்களா ?"

"குழந்தை இறந்தது உண்மை. எப்படி என்று தெரியாத காரணத்துக்காக, குற்றத்தைச் சகுந்தலாமீது சுமத்தமுடியாது. குற்றம் நடந்துவிட்டதென்று வழக்குகள் பதிவானாலும்; அதற்கு யாராவது ஒருவருக்குத் தண்டனை கொடுத்துதான் ஆகவேண்டுமென்று சட்டம் தண்டிப்பதில்லை. சந்தேகமற நிரூபிக்கப்பட்டால்தான், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குத் தண்டனை கிடைக்கும்.''

" இந்த வழக்கில், சகுந்தலாமீது சாட்டப்பட்ட குற்றம் சரியாக நிருபிக்கப்படாமல் இருக்கிறது என்று அர்த்தமா?" என்று தங்கம் ஆவலுடன் கேட்டாள்.

" நானும் அதைத்தான் சொல்கிறேன். சர்க்கார் தரப்பில் இதுவரை வந்த சாட்சியங்கள் எதுவும், சகுந்தலா குழந்தையைக் கடலில் போட்டதையோ, அல்லது அவள் விழுந்ததையோ நேரில் பார்க்கவில்லை. அவர்களுக்கு என்ன நமக்குக்கூட அவர்கள் எப்படி விழுந்தனர் என்று தெரியவில்லை. ஆதலால் சாட்டப்பட்டுள்ள குற்றங்களை எளிதில் சரித்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சரியான சாட்சியமில்லாததால், எதிரி விடுவிக்கப்படுவாள் என்ற தீர்ப்பு வரும் என்றுதான் நான் நம்புகிறேன். ஆரம்பத்திலிருந்த குழப்ப நிலை மாறி, சற்றுத் தெளிவாக இருக்கிறது. சர்க்கார் தரப்பில் வந்த சாட்சியங்கள் அவ்வளவு பலமான, நேரடியான சாட்சியங்களைத் தரவில்லை.''

" எப்படியாவது சகுந்தலா விடுவிக்கப்பட்டால் போதும் " என்று தங்கம் பெருமூச்சு விட்டாள்.

" ஒரு நோயை ஆராய்ந்து முடிவு தெரிந்து கொள்வதைவிட, ஒரு வழக்கிலுள்ள சிக்கல்களை ஆராய்ந்து முடிவு காண்பது கடினம் போலிருக்கிறது " என்றார் டாக்டர் சஞ்சீவி.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சகுந்தலா பக்கத்திலிருந்த வெளிவராண்டாவில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு தன் மீது நடந்துவரும் வழக்கைப்பற்றி அதிகக் கவனமோ, கவலையோ இருந்ததாகத் தெரியவில்லை. நாள்தோறும் கோர்ட்டில் வழக்கு நடக்கும்பொழுது, அவள் பேசாமல் உட்கார்ந்திருப்பாள். சாட்சிகள் ஒவ்வொருவராக் கூண்டிலேறி, பிரமாணம் எடுத்துக்கொண்டு, வழக்கமான ஊர், பெயர், இவைகளைச் சொல்வார்கள். அவர்கள் பதில் சொல்லும்பொழுது, கடற்கரை, கடலலை, இறந்துபோன குழந்தை இவைகளைப்பற்றிய ஞாபகம் சகுந்தலாவுக்கு மீண்டும் வரும். உடனே கோர்ட்டைவிட்டு எங்கேயாவது ஓடிவிடலாமா வென்று தோன்றும். ஆனால் சுற்றிலும் பார்த்தால், நீதிபதி, கோர்ட் சேவகர்கள், வழக்காடும் வழக்கறிஞர்கள், பின் தள்ளி, டாக்டர் சஞ்சீவி, டாக்டர் தங்கம் முதலானவர்கள், அவளால் ஒன்றும் முடிவதில்லை. எப்பொழுது கோர்ட் கலையும் என்று பார்த்துக்கொண்டிருப்பாள். அதிலும் அன்றைய தினம் டாக்டர் மார்தாண்டம் இறந்த குழந்தையின் பிணத்தை மரணப் பரிசோதனை செய்ததைப் பற்றிச் சொல்லிய பொழுது அவளுக்குத் தன்னைப்பற்றிய மரணப்பரிசோதனை நடத்துவதுபோலிருந்தது. ஏன் இந்த வழக்கு, மரணப்பரிசோதனை, சித்ரவதை எல்லாம். 'பேசாமல் முதலிலேயே தண்டனையைச் கொடுத்து அனுப்பிவிடலாம். சீக்கிரத்தில் வழக்கு முடிந்துவிட்டால் போதும், என்று அவளுக்குத் தோன்றியது.

" இந்த வழக்கு வந்ததும் போதும், ஆஸ்பத்திரி வேலை எனக்குக் கெட்டுவிட்டது " என்று சொல்லிக்கொண்டு தங்கம் வெளிவந்தாள். " நானும் வருகிறேன் "

என்று டாக்டர் சஞ்சீவி தனது கோட்டை மாட்டிக்கொண்டு புறப்பட்டார். அவர்கள் வந்ததும் சகுந்தலா எழுந்து நின்றாள்.

"ஓ! இங்கேயா இருக்கிறாய்?" என்று தங்கம் கேட்டாள்.

"அவள் ஒரு பூனைபோல் இருக்கிறாள், வருவது போவதுகூடத் தெரியவில்லை. இந்த வயதில் மாடிப்படியில் இறங்கும்பொழுதே வீடு அதிரும்படி சத்தம் வேண்டாமா?"

சகுந்தலா சற்று தலைகுனிந்து நின்றாள்.

"நாங்கள் போகிறோம். யாராவது வந்தால், ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறேனென்று அனுப்பவும்; எங்கே எனது டிரைவர்?" என்று டாக்டர் சஞ்சீவி படிக்கட்டில் இறங்கினார்.

"நான் போய் டிரைவரைப் பார்த்து அனுப்புகிறேன்" என்று சகுந்தலா தோட்டப் பக்கம் போனாள்.

இதற்குள் தங்கம் போய்த் தனது காரை எடுத்துவந்தாள். "எனது காரிலே போய் விடலாம்!" என்று டாக்டர் சஞ்சீவியை அழைத்தாள்.

"நீயல்லவா ஓட்டிவருவாய்! பரவாயில்லை; ஆஸ்பத்திரிக்குத்தான் போகிறோம்! ஏதாவது விபத்து உண்டாக்கவேண்டுமென்றால், ஆஸ்பத்திரிக்குச் சற்றுப் பக்கத்தில் போனதும் உண்டாக்கு?" என்று சஞ்சீவி சிரித்துக் கொண்டு காரில் ஏறிக்கொண்டார்.

"சேகர்! நீ என்ன செய்யப்போகிறாய்?" தங்கம் காரை நிறுத்தி கேட்டாள்.

"நானும் போகப்போகிறேன்! அடுத்த விசாரணை நாளைக்கு மூன்று மணிக்கு! பார்க்கலாம்!" என்று குலசேகரன் சொன்னான்.

தங்கத்தின் கார் புறப்பட்டது. குலசேகரன் தனது கார் நின்றிருந்த பக்கம் போனான். கார் டிரைவரை அழைக்கப்போன சகுந்தலா திரும்பி வந்தாள்.

"அவர்கள் எங்கே?"

"தங்கத்தின் காரில் போய்விட்டார்."

இரண்டுபேரும் சிறிதுநேரம் பேசாமல் இருந்தார்கள்.

"ஏன் நின்றுகொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்," என்று சகுந்தலா சொன்னாள்.

குலசேகரன் உட்கார்ந்தான். எதிரில் இருந்த பிரம்பு நாற்காலியில் சகுந்தலா உட்கார்ந்தாள். அவளிடம் என்ன பேசுவதென்று குலசேகரனுக்குப் புரியவில்லை. கடைசியாக "உங்களுக்கு உடல்நலம் எப்படியிருக்கிறது?" என்று மெதுவாக ஆங்கிலத்தில் கேட்டான்.

"நன்றாக இருக்கிறது! நன்றி!" என்று சகுந்தலா பதிலளித்தாள்.

"வழக்கு நடக்கிறது, மிகத் தொந்தரவாக இருக்கிறதல்லவா?"

"கோர்ட்டில் வழக்கு என்றதும் வந்து உட்கார்ந்திருக்கவேண்டியிருக்கிறது."

"உங்களையும் விசாரிக்கவேண்டிவரும். மற்ற சாட்சிகள் முடிந்துவிட்டால், குற்றப் பத்திரிக்கை வாசித்ததும் உங்களையும் குறுக்கு விசாரணை செய்வார்கள்."

"சீக்கிரத்தில் முடிந்துவிட்டால் நல்லது."

"சீக்கிரத்தில் முடிந்துவிடும்; அவர்களுடைய சாட்சிகள், அவ்வளவு கடுமையாக இல்லை. கொஞ்சம்கூட கவலைப்படவேண்டாம். உங்களை விடுவித்துவிடுவார்கள், நிச்சயமாக!"

சகுந்தலா பேசாமலிருந்தாள். முன்போல, குழப்பத்துடன் இல்லாமல், அமைதியாக, சகுந்தலா இருப்பதைக் கவனித்த குலசேகரன் முன்பு கேட்டு, விடைகிடைக்காமற்போன கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

"வழக்கில் குறிப்பிடப்படுகின்ற நாளன்று காலையில் நீங்கள் எங்கெங்கு போனீர்கள்? கடற்கரைக்கு எதற்காக வந்தீர்கள்? நன்றாக ஞாபகப்படுத்திப் பாருங்கள்."

சகுந்தலா நெற்றியைத் தடவிக்கொண்டு, உட்கார்ந்திருந்தாள். "அன்று என்ன நடந்ததென்றே என்னால் சரியாகச் சொல்லமுடியவில்லை. நான் நடந்துகொண்டேயிருந்தேன், கையில் குழந்தையுடன்! பகலில் நடந்தேன், ஆனால் இருட்டில் போவதைப்போலிருந்தது! ஒன்றுமே புரியவில்லை. இருட்குகையில் தடுமாறிக்கொண்டு வருவதைப்போலிருக்கிறது! என்ன நடந்தது என்று தெரியவில்லை. குழந்தை இறந்துவிட்டது. அது ஒன்றுதான் தெரிகிறது. குழந்தை இறந்தது நல்லதுதான். ஆனால் அத்துடன் நானும் இறந்திருக்கவேண்டும்" சகுந்தலாவின் முகத்தில் துயரச் சாயல் படிந்தது.

(தொடரும்)

அண்ட சராசரம்



இரா. செழியன்

(18)

ஆடு, மாடு இவைகளை வெட்டி, சோமரசம் போன்ற கள்ளைப் படைத்து ஆரியர்கள் யாகங்கள் நடத்தினார்கள். அந்த யாகங்களும், அவற்றில் நடத்தப்படும் அருவருக்கத்தக்க சம்பவங்களும் தமிழர்தம் பண்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டவையாயிருந்தன. ஆரியர் தம் யாகமுறைகளில் பெண்ணை நிர்வாணமாக வைத்துப் பலரும்கூடிப் பூஜிக்கும் பௌண்டரீகம் போன்ற யாகத்திலிருந்து, இறந்த குதிரையை அணைத்து அரசன் மனைவி இரவு பூராவும் இருக்கவேண்டுமெனக் கட்டளையிடும் அசுவமேதயாகம்போன்ற யாகங்கள்வரை, ஆபாசமிகுந்த யாகங்கள் பலப்பல இருந்தன. அதனால் ஆரியர் நடத்தும் யாகங்களை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இது தமிழர்மீது ஆரியர்களுக்கு அடங்காத ஆத்திரத்தை உண்டுபண்ணியது. ஆரியர் தம் யாகங்களைத் தமிழர்கள் வெறுத்தார்கள் என்பதும், அந்தத் தமிழர்களை அழித்துவிட ஆரியர்கள் பாடுபட்டார்களென்பதும், இந்திரனைப் பற்றிய வேத மந்திரங்களில் தெரியவருகின்றன.

ரிக் வேதத்தில் காணப்படும் கீழ்க்காணும் மந்திரங்கள் அதாவது பாடல்களைப் பார்த்தால், யாகமுறைகளை ஒத்துக்கொள்ளாத தமிழர்மீது ஆரியர் எவ்வளவு பகையும் அழுக்காறும் கொண்டிருந்தனர் என்பது தெரியும்.

"இந்திரனே! தேவரீர் யாகஞ்செய்பவர்களின் நன்மைக்காக யாகஞ் செய்யாதவர்களைக் கொல்லுகின்றீர்! தங்களைப் புகழ்ந்து தோத்திரம் செய்பவர்களின் விரோதிகளுக்குத் துன்பத்தைத் தருகிறீர்!"

(ரிக் வேதம் மண்டலம் 1, காண்டம் 51, மந்திரம் 9.)

இதில் யாகஞ் செய்பவர்கள் என்று குறிப்பிடப்படுவது ஆரியர்களை, யாகஞ் செய்யாதவர்கள் என்று குறிப்பிடப்படுவது தமிழர்களை. யாகஞ் செய்யாத தமிழர்களைக் கொலைசெய்துவிடவேண்டுமென்பது ஆரியர்களின் பிரார்த்தனை. யாகஞ் செய்பவர்கள் ஆரியர்கள், செய்யாதவர்கள் தமிழர்கள் என்பது ரிக் வேதத்தில் வரும் மற்றொரு பாடலில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கிறது.

"இறைவனே! தேவரீர் யாகஞ் செய்கின்ற ஆரியர்களை நன்றாக அறிவீர்கள். யாக விரோதிகளான தஸ்யூக்களையும் நன்றாக அறிவீர்கள்! ஆகையால், யாகஞ் செய்பவர்களின் நன்மையை உத்தேசித்து, யாகஞ்செய்யாத தஸ்யூக்களைக் கொன்றுவிடுவீராக!

யாகங்களுக்குத் தலைவரே! சர்வ வல்லமையுடைய தாங்கள் யாகஞ்செய்யாத தஸ்யூக்களைத் தண்டித்து, யாகஞ் செய்பவர்களுக்கு உற்சாகமாக இருக்கக்கடவீர்! எல்லாவிதமான யாக காரியங்களையும் நடத்தும்பொருட்டு, யாகம் செய்யும் இடங்களுக்குத் தாங்கள் வந்தருளவேண்டும்"

(ரிக்வேதம், மண்டலம் 1, காண்டம் 51, மந்திரம் 7.)

யாகஞ் செய்யாத தமிழர்களைக் கொன்றுவிடவேண்டுமென்று ஆரியர்கள் இந்திரனை வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

"இந்திரனே! தேவரீர் வஞ்சனைசெய்தே அந்த வஞ்சக தஸ்யூக்களை நடுங்கச் செய்யவேண்டும்; அவர்கள் பலவகைப் பொருள்களைத் தங்கள் வாய்க்குள்ளே இடுகிறார்கள்! துன்பந்தரும் அத்தகையவர்களின் ஊர்களை அழித்துவிடுங்கள்! தஸ்யூக்களைக் கொலைக்களத்தில் கொன்று, ஆரியர்களைக் காப்பாற்றுங்கள்!"

(ரிக்வேதம் மண்டலம் 1. காண்டம் 51. மந்திரம் 5.)

மேலே சொல்லப்பட்ட மந்திரத்தில் (பாடலில்), பலவகைப் பொருள்களைத் தங்கள் வாய்க்குள் போடுகிறுர்கள் என்பது யாகஞ் செய்யாமையைக் குறிப்பதாகும். யாகத்தில் நம்பிக்கையுள்ள ஆரியர்கள், சிரேஷ்டமென்று கருதும் நெய், பால், தயிர் இவற்றை யாகக் குண்டத்துத் தீயில் சிறிது சிறிதாகப் போடுவார்கள். அந்த நெய், பால், தயிர் இவற்றைச் சிறிதுகூட யாகத்தீயில் போடாமல், தங்கள் வாய்க்குள்ளேயே 'வஞ்சக தஸ்யூக்கள்' போட்டுக்கொள்ளுகிறுர்களாம்!

"இந்திரனே! சிரித்தும் கலங்கியும் இருக்கும் அந்தத் தஸ்யூக்களைத தேவரீர் யுத்தஞ்செய்து உலகிற்கு வெளியே ஓட்டிவிடுவீராக! மேலும் அந்தத் தஸ்யூக்களின் தலைவன் எங்கிருந்தாலும் பிடித்து வந்து சுட்டெரித்துவிடுவீராக! யாகத்திற்கு வேண்டிய சோமரசம், சுராபோன்ற (மது) வகைகளை உண்டுபண்ணி யாகஞ்செய்து தங்களைத் தோத்திரம் செய்துவருகிற எங்களை இரட்சிப்பீராக!

(ரிக்வேதம் 1—33—7.)

தாங்கள் கேட்டுக்கொண்டதற்கொப்ப, இந்திரனும் விரோதிகளான தஸ்யூக்களைக் கொன்றுவிடுவதாக ஆரியர்கள் பாடியுள்ளனர்.

"இந்திரனே; தேவரீர் கொலைக்களத்தில் கெட்டவர்களாகிய தஸ்யூக்களைக் கொன்று நல்லவர்களைக் காப்பாற்றுகின்றீர்! தங்களுக்கு ஊழியஞ் செய்பவர்களின் நன்மைக்காகச் சம்பரன் என்ற அசுரனைக் கொன்றீர்! கோடிக்கணக்கான தஸ்யூக்களைக் காலினல் மிதித்துக் கொன்றுவிடவே தேவரீர் உண்டாகியிருக்கிறீர்கள்!"

(ரிக் 1—51—6)

"இந்திரனே! தஸ்யூக்கள் யாகஞ்செய்வதில்லை. யாகஞ் செய்பவர்களுடன் பகைத்துக்கொள்ளுகிறுர்கள். தங்களுடைய வல்லமையால் அவர்களைத் தோல்வியுறச்செய்கிறீர்கள்! நல்ல குதிரைகளை உடையவரே! தஸ்யூக்களை எங்குமில்லாமல் செய்துவிடுகிறீர்!"

(ரிக்—33—5.)

தமிழர்கள் (தஸ்யூக்கள்) மீது மாருத பகைமையும், பொருமையும் கொண்டு ஆரியர்கள் எழுதிவைத்துள்ள பாடல்கள் வேதங்களில் உள்ளன. வேதகாலத்தில் ஆரியர்களின் முக்கிய கடவுளாக இருந்த இந்திரன், தஸ்யூக்களுடன் சண்டைபோடுபவராகவும், அவர்களைக் கொலைக்களத்தில் கொல்பவராக: தஸ்யூக்களை எங்குமில்லாமல் செய்பவராகவும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.

புராணக் கதைகளின்படி இந்திரன் தேவர்களுக்குத் தலைவன் சொர்க்கலோகத்துக்கு அரசன் என்று சொல்லப்படுகிறது. ஆனல் அந்தக் கதைகளின்படி அவன் செய்த அரும் பெருஞ் செயல்கள்—முனிபத்தினிகளைக் கற்பழித்தல், யாகக் குதிரைகளைத் திருடுதல், பிறர் செய்யும் தவத்தைக் கெடுத்தல், தன் மகளின் மானத்தை மாற்றுனிடம் ஈடுவைத்தல், கர்ப்பத்திலிருக்கும் சிசுவைக் கொலை செய்தல், எதிரியை யாகப்பசுவாக்கி யாகத்தில் பலியிடல், போன்றவைகளாகும். காமம், திருட்டு, கொலை, களவு, குடி இவைபோன்ற மாபாதகங்கள் எதிலும் இந்திரன் பின்னடைந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் அவன் தேவலோகத்துக்கு அதிபதியானன். புண்ணியஞ்செய்தவர்கள், அம்மாபாதகனின் உலகத்துக்குப் போவதாகக் கூறப்படுகிறது.

தேவலோகத்தில் தேவர்கள், ரிஷிகள், தேவமாதர்கள் முதலியவர்கள் இருப்பார்கள். மகாயாகங்களைச் செய்தவர்களும், தீர்த்த யாத்திரை போனவர்களும், புண்ணியகாலங்களில் தானந் தந்தவர்களும் தவருமல் விரதம் இருப்பவர்களும் தேவலோகத்தை அடைந்து, அங்குள்ள போகபோக்கியங்களை அடைவார்களாம். இந்த உலகத்தை அடைந்ததும், யௌவனம் மாருத தேவமாதர்கள் ஓடோடியும் வந்து கைலாகு கொடுத்து அழைப்பார்களாம், ஒரு பக்கத்தில் ரம்பை பாடுவாள், ஊர்வசி ஆடுவாள், திலோத்தமை கைகொடுப்பாள், மேனகை மேனியழகு காட்டி நிற்பாள்! தேவலோகத்துக்கு வருபவன் எதைப்பற்றியும் கவலைப்படவேண்டியதில்லையாம்! அவன் எது கேட்டாலும் உடனே தரவல்ல காமதேனு இருக்கிறது! கேட்கக்கூட வேண்டியதில்லை, நினைத்தாலே போதும் இதோ! என்று கற்பகத்தரு கொடுத்துவிடுமாம்! பாரிஜாத வனத்தில் உலவலாம், அமிர்தம் பருகிக் களிக்கலாம், தேவமாதர்களை விரும்பினல் அட்டியின்றி பெறலாம்! இவ்வகை போக போக்கியங்களை தேவலோகத்தில் பெற, பூலோகத்தில் ஒருவன் என்னசெய்ய வேண்டும்? புண்ணிய காலங்களில் பிராமணுளுக்குத்தானம் கொடுத்தால் போதும், வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட யாகத்தை நடத்தினல் போதும், தீர்த்தயாத்திரை போய் அங்குள்ள கடவுள்களைத் தரிசித்தால் (தரிசித்

தால் என்றால் அர்ச்சகர்களுக்குத் தட்சிணை கொடுத்துத் தரிசிக்கவேண்டும்) போதும்! போகபோக்கியங்களை தேவலோகத்தில் நிறையச்செய்து, தேவமாதர்களை வர்ணித்து, எவ்வளவு செய்தாலும் அங்கு தண்டனை கிடைக்காது என்பதற்கு இந்திரனின் கதையைச் சொல்லிக் கடைசியாக அப்படிப்பட்ட தேவலோகத்துக்குப் போக, பூதானம் செய், கோதானம் செய், லட்சார்ச்சனை செய், காசிக்குப்போ, என்றெல்லாம் புராணக்காரர்கள் சொல்வாராயினர்.

தேவலோகம் 200 கோடி மைல் உயரமும் 85 கோடி மைல் நீள அகலமும் உடைய தெனப் புராணம் கூறுகிறது. தேவலோகத்தின் தலைமைப் பதவிக்கு நூறு அசுவமேத யாகம் செய்ததால், இந்திரன் வந்தானாம். வேறெவரும் நூறு அசுவமேத யாகங்கள் செய்தாலும் இந்திரபதவியை அடைந்துவிட முடியும். ஆனால் கடைசிவரை (புராணங்கள் எழுதுமவரை) வேறெவரும் இந்திரனை அகற்றி, தேவலோகத்துக்கு அரசனாகவில்லை. பலதடவை இந்திரன் தலைநகரைவிட்டு தேவலோகத்தைவிட்டு ஓடியிருக்கிறான். ஆனால், மும்மூர்த்திகளில் யாராவது ஒருவர் உதவிக்கு வந்து அவனைக் காப்பாற்றிவிடுவார்கள், அல்லது தேவமாதர்கள் சென்று வெற்றி கொள்வார்கள். எப்படியாவது எதிர்ப்புப் போய், இந்திரன் தேவலோக அரசனாகிவிடுவான்.

இந்திராணி

இந்திரனின் பட்டத்துராணியாக இருப்பவள் இந்திராணி. இவள் சத்த மாதாக்கள் என்று சொல்லப்படும் ஏழு பெண் கடவுள்களில் ஒருத்தி. சத்தமாதாக்கள்—பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி முதலானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கோலத்தில் இருப்பார்களாம். இந்திராணி, வச்சிரம், சூலம், கதை ஏந்தியவளாய், அழகான ஆடைகளை அணிந்து யானைமீது அமர்ந்திருப்பாளென்று புராணம் வர்ணிக்கிறது.

இந்திராணி பிறந்தது பாற்கடலில் என்று கூறப்படுகிறது. முதலில் தேவருக்கும் அசுரர்க்கும் சண்டை ஏற்பட்டபொழுது, தேவர்கள் தோல்வியடைந்து ஏராளமான தேவர்கள் சண்டையில் இறந்தும் விட்டார்கள். இறந்து போகாமல் இருக்க வழிதேடியபொழுது, பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும், அந்த அமிர்தத்தைப் பருகினால் சாவாமை கிட்டும் என்று தேவர்களுக்குத் தெரிந்தது. உடனே வெற்றிபெற்ற அசுரர்களை வேண்டித் துணைக்கழைத்து, பாற்கடலைக் கடையத்தொடங்கினார்கள். அதற்குப் பூமி பானையாக, மேருமலை மத்தாக, சந்திரன் தறியாக, வாசுகி என்ற பாம்பு நாணாக ஆயிரம் வருஷங்கள் கடைந்தார்களாம். முதலில் விஷம் பிறந்ததாம். சிவபெருமான் அந்த விஷத்தை எடுத்து உண்ண, அருகிலிருந்த உமாபிராட்டி கழுத்தைப்பிடிக்க, விஷம் தொண்டையிலேயே தங்கி, சிவபெருமான் நீலகண்டராகிவிட்டாராம். மீண்டும் தேவாசுரர்கள் கடையத்தொடங்கினார்களாம். நீண்ட காலம் கடைந்ததால், பானையாக இருந்த பூமியை, மத்தாக இருந்த மேருமலை குடைந்துவிட்டது. உடனே திருமால் ஆமைவடிவமாகி, அடியில் போய்த் தாங்கிக்கொண்டார். கடைசியில் அமுதம் கிளம்பத்தொடங்கியது. அமுதத்துடன், தன்வந்திரி என்ற தேவ வைத்தியர், அறுபதுகோடி அரம்பையர்கள், அவர்களுக்குத் தோழிமார்கள், உச்சைச்சிரவமென்ற குதிரை, பாரிஜாதம், சந்தானம், அரிச்சந்தானம் போன்ற மரங்கள், காமதேனு, ஐராவதம், சிதேவி, மூதேவி, இந்திராணி, அகலிகை முதலியவர்களும் பாற்கடலிலிருந்து வெளிவந்தனர். சிதேவியை திருமால் ஏற்றுக்கொண்டார். இந்திராணியையும், அறுபதுகோடி அரம்பையர் கூட்டத்தையும் இந்திரன் அழைத்துக்கொண்டான். அகலிகையைப்பற்றி வந்த போட்டியில், இந்திரனையும் மிஞ்சி, கௌதமர் அவளை அடைந்தார். இந்திராணியும், அறுபதுகோடி அரம்பையர்களும் போதாதென்று, இந்திரன் அகலிகைபேரிலும் ஆசைகொண்டிருந்தான். அதுபற்றிய புராணக்கதை முன்பு கௌதமர் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது.

இந்திராணி தேவலோகத்து அரசியானாள். இந்திர பதவி இந்திரனைவிட்டு மாறியபோதிலும், இந்திராணியின் பதவி மாற்றப்படாது என்று தெரிகிறது. யார் இந்திரபதவி யடைந்தாலும், இந்திராணி ஒருத்தியாக இருந்தாள்.

(தொடரும்)

மக்கட் பெருக்கம்

(3)

'டாக்டர்'

கருத்தடை செய்தற்கான குறிப்புகள் (Indications for Contraception)

குடும்பக் கட்டுத்திட்டம் (Family Planning) நமது நாட்டிற்கு எவ்வளவு இன்றியமையாததாகத் தேவைப்படுகின்றது என்பதை நாம் இதுகாறும் ஆராய்ந்து பார்த்தோம். நாட்டின் பொருளியல் வளத்தைப் பெருக்கவும், நாட்டிற்கு நல்வாழ்வை நல்கவும், நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் தாய்—குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கையின் அளவைக் குறைக்கவும் அது எந்த அளவுக்குப் பயன்படுகின்றது என்பதையும் கண்டோம். மற்ற நாடுகளில் நன்கு நுணுகி ஆராய்ந்து தெளிவாகக் கண்டறிந்தவகையில், பிள்ளைபெறும் தாய்மார்களில் நான்கில் ஒரு பங்கு விகிதத்தினர் பிள்ளை பெறுங்காலத்தில் இறந்துபடுவதற்குக் காரணம், அவர்கள் பிள்ளை பெறுவதற்கே அருகதையற்றவர்களாக இருக்கிறார்கள் என்றும், முன்பு ஏற்பட்ட பிள்ளைப்பேறுகளின் காரணமாகவும், மற்றும் பல நோய்களின் காரணமாகவும் அவர்கள் அருகதையற்ற நிலையை அடைந்துவிடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. பிள்ளைப் பெறுதல் தன்னுடைய உடல் நலத்தை எந்தவகையிலும் அழித்துவிடாது என்று நன்றாகத் தெரிந்தால் ஒழிய, எந்தப் பெண்ணும் கருவுறுதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளக்கூடாது. எப்படிப்பட்ட சூழ்நிலைகளின்போதும், எப்படிப்பட்ட நோய்கள் கொண்டிருக்கும்போதும் கருவுறுதல் கூடாது என்பதை ஒவ்வொருவரும் தெளிவாக அறிந்துகொள்ளுவார்களேயானால் அது நாட்டுக்கும் பெண்ணினத்திற்கும் நலம்பயப்பதாகும். கருத்தடை முறைகளைக் கையாள வேண்டியதன் இன்றியமையாத நிலைமைகள் எவை எவை என்பதைச் சிறிதளவு காண்போம்.

(அ) கருத்தடை முறையை மேற்கொள்வதற்கான முக்கிய மருத்துவத்துறைக் குறிப்பு (Medical Indications) களாவன :

1. சூல் கொண்ட பெண்ணுக்கு (கர்ப்பிணிக்கு) ஒவ்வொரு பிள்ளைப்பேற்றின்போதும் **சன்னி, மிக்க இரத்த அழுத்தம், கைகால் வீக்கம், சிறுநீரில் உப்பு போன்ற கோளாறுகள்** ஆகியவைகள் (Toxemias) அடுத்தடுத்து ஒவ்வொரு முறையும் ஏற்பட்டால், அவளும் அவளது குழந்தையும் இறக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தகையவர்களால் குழந்தை இறப்பும் தாய் இறப்பும் எண்ணிக்கையில் பெருகுகின்றன. ஆகையால் இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படும் தாய்மார்கள் கருத்தடை முறையைக் கையாளுவது நலம் பயக்கும்.

2. இதய நோய் (Heart Disease) பிள்ளைப் பேற்றிற்குப் பெருங்கேடாக அமைந்துவிடுகிறது. இதயநோய் கொண்ட பெண்கள், பிள்ளைபெறுங்காலத்தில், பெரும்பாலும் சாவை அணுகவேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள். இதனாலும் தாய் இறப்பின் எண்ணிக்கை பெருகுகிறது. இத்தகைய பெண்கள் கருவுறாமல் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

3. முற்றிய சயரோகம் (Acute Tuberculosis) உடைய பெண்டிர் பிள்ளைப்பேற்றை விரும்பாமல் இருப்பது நல்லது. அந்த நோய் தாய்க்கும் சேய்க்கும் கேடுபயக்கின்றது. சயரோகத்தால் பீடிக்கப்பட்டுள்ள எல்லாப்பெண்களும் கருத்தடை முறைகளைக் கட்டாயம் பின்பற்றவேண்டும்.

4. சிறுநீரில் சர்க்கரைநோய் (Diabetes Mellitus) தலைமுறைக்குத் தலைமுறைத் தாவுகிறது என்பது மட்டுமல்லாமல், குழந்தை கருப்பையில் இருக்கும்போதே அதனை மிகப் பெரிதாகவும், மிக்க எடையுள்ளதாகவும் ஆக்கிவிடுகிறது. இதனால் குழந்தை வெளி வரமுடியாமல் கருப்பைக்குள்ளேயே இறந்து விடும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். இது தாயின் இறப்புக்கும் காரணமாகிவிடும். தாயைக் காப்பாற்றவேண்டுமானால் கருப்பைக் குள் இறந்துவிடும் குழந்தையை உடனே வெளியே எடுக்க வேண்டி நேரிடும். அதற்குத் தாயின் அடிவயிற்றைக் கிழித்தெடுக்கும் அறுவைமுறை (Caesarian operation) யைத்தான் கையாளவேண்டிவரும். சிறுநீரில் சர்க்கரை நோய் கொண்ட பெண்கள் இப்படிப் பட்ட தொல்லைகளையும் துயரங்களையும் களைய, கருத்தடை முறையைக் கையாளுவது நலம்.

5. சிறுநீர்ப்பைக் கோளாறு (Kidney disorder) உடைய பெண்களும் சூல்கொள்ளாமல் இருப் பது இன்றியமையாததாகும். அப்படியிருப் பது பல கேடுகளைத் தவிர்ப்பதற்கு ஏது வாகும்.

6. உயிர்க்குக் கேடுதருவனவாகிய பெரும் நோய்களுக்கு ஆட்பட்டு, அவற்றிலிருந்து அண் மையில் தப்பிப்பிழைத்தவர்களும் அல்லது பெரிய அறுவை மருத்துவம் செய்துகொண்டவர் களும் அல்லது அடிவயிற்றைக் கிழித்துப் பிள்ளை யெடுக்கும் அறுவையை (Caesarian operation) அடிக்கடி செய்துகொண்டவர்களும் பிள்ளைப்பேற்றை விரும்பக்கூடாது. ஒரு முறை கருப்பை கிழிக்கப்பட்டுப் பிள்ளை எடுக் கப்பட்ட தாய், மீண்டு கருவுற்று, இயற்கை யான வழி வழியாய்ப் பிள்ளையைப் பெற் றெடுக்க முயன்றால், கருப்பை கிழிந்துபோவ தற்கு ஏது ஏற்பட்டுவிடும். வயிற்று அறு வையை மூன்றுமுறை கையாண்ட தாய்மார் கள், மேலும் கருவுறுதற்கு இடமளிக்கக் கூடாது. ஏனென்றால், நான்காவது அறு வையை வயிற்றில் செய்ய அவர்களது உடல் இடங்கொடுக்காது. எனவே அத்தகையோர் கருத்தடை முறையை மிகக் கவலையோடு கடைப்பிடிக்கவேண்டியது இன்றியமையாமை யாகும்.

7. அடுத்தடுத்துக் குறிப்பிட்ட காலத்திற்குள் குழந்தைகளைப் (Closely approximated Children) பெற்றெடுக்கும் தன்மை தாய்மார் களுக்குப் பெருஞ்சுமையாகவும், பெருந்தொல் லையாகவும் அமைந்துவிடுகிறது. குழந்தை இறப்பின் எண்ணிக்கை கூடுவதற்கு இந்தத் தன்மையும் காரணமாக இருந்துவருகிறது. குழந்தை இறப்பு பற்றி நடத்திய சிற்சில ஆராய்ச்சிகள், 'மிகக் குறைந்த இடையீட்டுக் காலத்தில் பிறக்கும் குழந்தைகள், நீண்ட இடையீட்டுக் காலத்தில் பிறக்கும் குழந்தை களைக் காட்டிலும் குழந்தைப் பருவத்திலேயே இறந்துபடுவதற்கான வாய்ப்புகளைப் பெற் றிருக்கின்றன' என்று தெரிவிக்கின்றன. குறைந்த இடையீட்டுக் காலத்தில், அதாவது ஆண்டுக்கு ஒருமுறை குழந்தைகளைப் பெற் றெடுக்கும் தாய்மார்கள், குழந்தை இறப்புக் குக் காரணமாவதோடு, தங்கள் உடல்நலத் தையும் மிகவாக இழந்துவிடவேண்டியவர் களாக இருக்கிறார்கள். பெற்றெடுக்கும் குழந் தைகளைச் சாகாமல் காப்பாற்றவும், தங்கள் உடல் நலத்தைத் தேற்றிக்கொள்ளவும் தாய் மார்கள் தேவையான கால அளவுக்குக் கருத் தடை முறையை மேற்கொள்ளவேண்டும். எனவே அடுத்தடுத்து, அதாவது ஆண்டுக்கு ஒருமுறை, பிள்ளை பெற்றெடுக்கும் தன்மை, கருத்தடை முறையை வலியுறுத்தும் முக்கிய குறிப்புகளிலே ஒன்றாகும்.

8. பலமுறை கருத்தரித்தல் (Great Multiparity) கருத்தடை தேவை என்பதைக் காட் டும் குறிப்பாகும். எட்டாவது பிள்ளைப்பேற் றிற்குப் பிறகும் சூல் கொள்ளும் தாய், உயிரி ழப்பதற்கான நிலைமைகள், பொதுவாக இருக் கின்றன என்று ஆராய்ச்சிமுடிவுகள் வெளிப் படுத்துகின்றன. ஐந்தாவது பிள்ளைப்பேற் றைக் கொள்ளும் தாய் இறந்துபடுவதற்கு எவ்வளவு சூழ்நிலைகள் ஏற்படுமோ, அவற் றைப்போல் மூன்று மடங்கு மிகவான சூழ்நிலை கள் எட்டாம் பிள்ளைப்பேற்றில்ஏற்படுகின்றன. பல பிள்ளைப்பேற்றை ஏற்கும் தாய்மார்களில் பெரும்பாலோரும், இந்தக் கேட்டிற்கு இரை யாக வேண்டியவர்களாகத்தானிருக்கிறார்கள். பல பிள்ளைப்பேறுகள், தாய்க்கு முடிவில் இறப்பைத் தருவதாக அமைந்துவிடுவதோடு முதற் குழந்தைக்குப் பிறகு பிறக்கும் குழந்தை களின் உடல் நலத்தைக் குழந்தைக்குக் குழந்தை குன்றச்செய்வதாகவும் அமைந்து விடக்கூடும். இப்படிப்பட்ட சீர்கேடுகளி லிருந்து தப்பிக்கக், கருத்தடை முறை, மிகவு வேண்டற்பாலதாகும்.

மேலே சொல்லப்பட்ட நிலைமைகளையும் நோய்களையும் கொண்ட பெண்டிர் தாம் கரு வுறுவதால் ஏற்படும் கேடுகளை உணர்ந்து டாக்டர்களை அணுகி ஆவன செய்துகொள்ள முற்படவேண்டும். அவர்களுடைய கணவ

மார்களும் தம் மனைவியரின் உடல் நிலைகளுக்கு ஏற்ப, டாக்டர்களின் அறிவுரையின்பேரில், கருத்தடை முறைகளைக் கையாளக் கற்றுக் கொள்ளவேண்டும். நிலையர்களே கருத்தடையை ஏற்படுத்தவேண்டுமானாலும் அல்லது இரண்டு குழந்தைகளுக்கிடையே போதுமான அளவு இடைவெளிவிட்டுப் போதுமான அளவு குழந்தைகளைப் (Spacing of children) பெற்றுக்கொள்ளவேண்டுமானாலும் அவற்றிற்கான கருத்தடை முறைகளைக் கற்றுக்கொள்வதுதான் நலம்பயப்பதாகும்.

(ஆ) கருத்தடையை மேற்கொள்வதற்கான சமூகப் பொருளியல் குறிப்புகள் :

பூவின் இதழ்போலப் பொலிவுற்றுச், சின்னஞ்சிறு மணிக்கண்ணை அசைத்து, இனிய மழலைமொழிகளைச் சிறிய உதடுகளிலே நடமாடவிட்டுப், புன்சிரிப்பைக் கன்னங்களிலே கொப்பளிக்கச் செய்து தாயின் மடியிலே தவழ்ந்து கிடக்கும் குழந்தை ஒவ்வொரு தாய்க்கும் அளப்பரும் பெருமகிழ்ச்சியை வாரி வாரி வழங்குவதாகவே இருக்கும். குடும்பக்கவலைகள் எவ்வளவு இருந்தாலும், அத்தனையையும் அப்போதைக்கப்போது போக்கிடும் அருமருந்தாக அக்குழந்தை விளங்குகிறது. தந்தையானவன் நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, அலுத்துப் போய்ச், சோர்ந்து, மனக்கவலையோடு வீடு திரும்பும்போது, அவனது மனக்கவலைகளையும் சோர்வையும் அவனது குழந்தை அரைநொடியில் அகற்றிவிடுகிறது. குழந்தை, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள காதலன்பின் அடையாளமாகும். வாழ்க்கையில் ஓயாமல் ஒழியாமல் மகிழ்ச்சியைப் பொங்கச் செய்வதற்கு ஏற்ற உறுதுணையாக விளங்குவது மழலைமொழி பேசும் சின்னஞ்சிறு குழந்தையாகும். ஆனால் இந்த உண்மையெலாம், இன்பமெலாம், மகிழ்ச்சியெலாம், அழகெல்லாம் அடியோடு போய்விடுகின்றன, அளவுக்கு மீறிய குழந்தைகள் ஒரு பெரிய பட்டாளம்போல நடுத்தர வகுப்புக்குடும்பத்திலோ அல்லது கீழ்த்தர வகுப்புக் குடும்பத்திலோ தோன்றிவிட்டால். நடுத்தர—கீழ்த்தர வகுப்புக்குடும்பங்களில் வருவாயும், வளமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருக்கமுடியுமாகையால், அவற்றைக்கொண்டு வாழமுடியாத அளவுக்குக் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகிவிடுமேயானால், பின்னர் அத்தகைய குடும்பங்கள், மகிழ்ச்சியின் குன்றாக விளங்கா, வேதனைப் படுகுழியாகத்தான் காட்சியளிக்கும். அத்தகைய குடும்பங்களில் தாய் வறுமை—நோய்—கவலை ஆகியவற்றின் ஒருருவாகத்தான் தோற்றம் அளிப்பாள். குடும்பத் தேவையில் பாதியைக்கூட நிறைவேற்றிவைக்கமுடியாத நிலைஏற்படும்போது, தந்தை குடும்பத்தினரைக் கொன்றுபோட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள முயலுகிறான். குடும்பத்தில் குறிப்பிட்ட அளவு குழந்தைகள் அதாவது அவை குடும்பத்திற்குச் சுமையாக இல்லை என்று எண்ணிடும் அளவுக்கு இருக்குமேயானால், அவற்றை மிக அக்கரையோடும், தேவையான வசதிகளோடும் காப்பாற்ற முடிகிறது. ஆனால் குழந்தைகளின் எண்ணிக்கை அளவைமீறிச் செல்லும்போது, குழந்தைகள் வசதிகளற்ற மிகச் சீர்கேடான நிலைமையில் வளர்க்கப்பட வேண்டியவைகளாகின்றன. அப்படிப்பட்ட குழந்தைகள் ஏழ்மையிலே தோற்றுவிக்கப்பட்டுப், பற்றாக்குறையாக உணவளிக்கப்பட்டு, அரைகுறையாகக் கல்வி கற்பிக்கப்பட்டு, இறுதியில் காப்பாரற்று முழுக்க முழுக்கக் கைவிடப்பட்டுத் திக்கற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். கைகழுவிவிடப்பட்ட குழந்தைகளும், ஒற்றுமையில்லாத குடும்பங்களிலிருந்து துரத்தி அடிக்கப்பட்ட குழந்தைகளுந்தான் நாளடைவில் பெருங்குற்றவாளிகளாக மாறிவிடுகின்றனர். அவர்களின் காரணமாக நாட்டில் குற்றங்கள் மலைமலையாகக் குவிந்துவிடுகின்றன. எனவே நாடும் குடும்பங்களும் நல்ல நிலையை எய்த வேண்டுமானால் எவ்வளவு குழந்தைகளைப பெற்றெடுத்துக்கொண்டால், குடும்பத்தினர் மகிழ்ச்சியோடும் நலத்தோடும் வாழமுடியும் என்பதை அறிந்து, அதற்கேற்பக் கருத்தடை முறையை ஒவ்வொரு குடும்பமும் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்.

(இ) உளவியல்பற்றிய குறிப்புகள் (Phychological Indications)

விரும்பாத நிலையில் பிள்ளைப்பேறு உண்டாவதும், மேலும் பிள்ளைப்பேறு வேண்டாம் என்று அஞ்சுவதும் குடும்பத்தில் அடிக்கடி சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாகி கணவன்—மனைவி ஆகியோரிடையே நிலவவேண்டிய காதலன்பை முறித்துவிடுவதாகவும் அமைந்துவிடுகின்றன. கருவுண்டாகிவிடுமோ என்ற அச்சமும் கவலையும், கணவன்—மனைவி ஆகியோரிடையே வளரக்கூடிய காதல்—அன்பு—ஆண்பெண் உணர்ச்சி ஆகியவற்றைக் காட்டிலும் மிகப்பெருகி, அவற்றைப் புறக்கணிக்கும்படி செய்துவிடுகின்றன. விரும்

பிப்பெற்றெடுக்கப்படும் குழந்தைதான் பெற்றோர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சீரோடும் செழிப்போடும் வளர்கின்றது; ஆனால் பெற்றோர்கள் விரும்பாத நிலையில் பிறக்கும் குழந்தையும், வெறுத்தொதுக்கப்பட்ட குழந்தையும் முதலிலிருந்தே எல்லாவற்றிலும் பற்றாக்குறை நிலையில் வைக்கப்படுகின்றன. அந்தக் குழந்தைகள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுவதால், அவர்கள் கொலைகாரர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும், எத்தர்களாகவும் ஏமாற்றுக்காரர்களாகவும், திருடர்களாகவும் தொல்லை தருவோராகவும் மாறிவிடுகின்றனர். அளவுக்கு மீறிய குழந்தைகள் பிறப்பது குடும்பத்தினரின் உள்ளப்பண்புகளையும், இன்ப உணர்வையும் அடியோடு மாய்த்துவிடுகின்றது. எனவே பெற்றோர்களும் குழந்தைகளும் மகிழ்ச்சிகரமான மன நிலையோடு கூடிய நல்வாழ்வு வாழக் கருத்தடை முறை எவ்வளவு முக்கியம் என்பது பெறப்படும்.

(ச) பரம்பரை நோய் பற்றிய குறிப்புகள் (Engenic indicationS)

கணவனுக்கோ மனைவிக்கோ உடல் பற்றியோ அல்லது உள்ளம் பற்றியோ தீராத தொத்துநோய்க் கோளாறுகள் ஏற்பட்டிருக்குமாயின், அவை அவர்களுடைய குழந்தைக்கும் பரவக்கூடும். அப்படிப்பட்டவர்கள் கருத்தடை முறையைக் கையாளுவது எவ்வளவோ சாலச் சிறந்த நன்மைபயப்பதாகும். எக்காரணத்தைக் கொண்டும்பிள்ளை பிறக்காத மலட்டுத்தன்மையை ஏற்படுத்திக்கொள்வதுகூட சிறந்த முறையாகும். இல்லையானால் சமூகத்திற்குப் பெருஞ்சுமையாகக் காட்சியளிக்கக்கூடிய வேண்டப்படாத பிள்ளைகள், ஏராளமாகத் தோன்றிவிடுவார்கள். பரம்பரை பரம்பரையாகப் பற்றிச் செல்ல கூடிய நோய்கள்—சிறுநீரில் சர்க்கரை நோ (Diabetes mellitus), மூளைக்கோளா நோய்கள் (Forms of insanity). காக வலிப்பு போன்ற நோய்கள் (Epilepsy பிறவியிலேயே வேறுபட்ட உடலமைப்பு குறைகள் (Conginital malformations கிரந்திப்புண் (Syphilis) போன்ற பல மாகும். கிரந்திப்புண் கருப்பைக்குள் இருக்கு குழந்தையையே பெரும் அளவுக்குத் தாக்கி அதன் உடலமைப்பு—அழகு எல்லாவற்றை யும் வேறுபடுத்திவிடும். இப்படிப்பட்ட நோ களையும் குறைபாடுகளையுங் கொண்டவர்க மணம் செய்துகொள்ள சமூகம் அனுமதி தாலும், அவர்கள் குழந்தைகளைப் பெற் டுக்க ஒருநாளும் அனுமதிக்கக்கூடாது. அவ களுக்குக் குழந்தைகள் பிறப்பதால் ஏற்படு பெருங்கேடுகளை, அவர்களிடம் அறிவுறுத்தி கூறி, அவர்கள் சூல்கொள்ளாமல் தடுப்பத காளக் கருத்தடை முறைகளை அவர்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்கள் தலைமுறையோடு பரம்பரை நோய்கள் ஒழியுமாறு செய்யவேண் டியது சமூகத்தின் நீங்காக் கடமையாகும் கருத்தடைக்கான கருவிகளையும், முறைகளை யும் அவர்கள் எளிதில் பெறும்படியான வசதி களைச் சமூகம் செய்துதரவேண்டும்.

இதுகாறும் மேலே கூறப்பட்ட விளக்கங் களை எல்லாம் நன்கு ஊன்றிக் கவனித்தால் குடும்பக் கட்டுத்திட்டமும் (Family planning), குழந்தை இடையீடும் (Chil spacing) சமுதாய வாழ்வின் வளத்தையு வனப்பையும், நலத்தையும் நல்நிலையையு காப்பாற்றும் நெறிமுறைகளாகும் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இன்றைய நிலையி நாட்டில் அமைதியும், மகிழ்ச்சியும், நல்வாழ்வு நிலவவேண்டுமாயின், கருத்தடை பற்றி அறிவும், முறைகளும் எங்கணும் எல்லோரிடமும் பரப்பப்படவேண்டும்.



கிழவி ஆயினும் கைவிடாதே!

[எழினி]

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே நிறையப் பெற்ற அழகிய சிற்றூர். எங்கணும் பூம்பொழில்கள். வண்ண மலர்கள், கொஞ்சவரும் தென்றலின்மீது நறுமணத்தை வாரியிறைக்கின்றன. நறுமணத்திலே முழ்கி எழும் தென்றல், ஆடி அசைந்து தன்னைத்தானே குலுக்கி, நறுமணத்தை வழிநெடுக சிதறவிட்டுக்கொண்டே செல்கிறது. ஆற்றிலிருந்து பிரிந்து வாய்க்கால் வழியோடிச் சிலுசிலுவென்று பூம்பொழில்களிலே பாயும் நீர், குளிர்ச்சியை வழங்கியவண்ணமிருக்கிறது.

மணத்தையும் குளிர்ச்சியையும் நுகரும் பொருட்டு இளைஞன் ஒருவன் பூம்பொழில் நோக்கி நடந்து செல்கிறான். பூம்பொழிலிலே பெண்களின் சிரிப்பொலி கேட்க, ஒலிவந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கிறான். இரண்டு பெண்கள் ஓடிப்பிடித்து விளையாடுவதைக் காண்கிறான். அவர்களது ஆட்டம் அந்த இளைஞனின் கண்களுக்குப் பெருவிருந்தாக அமைவதோடு, அவர்களது தோற்றம் அவனதுகருத்தைக்கவருவதாகவும் அமைந்துவிடுகிறது. அவன் உடலை அவ்விடத்திலேயே நிறுத்திவைத்துவிட்டு, உள்ளத்தை அவர்களின் செயல்களின்மீது தொடரவிடுகிறான். அவர்கள் ஆட்டம் ஆடியும் பாட்டுப்பாடியும், ஓடிவிளையாடியும் தேடிப்பிடித்தும், பூக்கொய்தும் பூப்பந்து எறிந்தும் மகிழ்ந்திருக்கின்றனர். மாலைப்பொழுதும் சிறிது சிறிதாக மங்கிக்கொண்டு வருகிறது. அவனது உடலைத் தனியே நிறுத்திவைத்துவிட்டு வந்திருப்பதிலே அவனது உள்ளத்திற்கு அவ்வளவு விருப்பமில்லை. உடலை அழைத்துக்கொண்டு அவர்கள் அருகே போகவேண்டும்போல் உள்ளத்திற்குத் தோன்றவே, அவ்வாறே செய்யத் தொடங்கிற்று. அவன் அவர்கள் அருகே மெல்ல சென்றான். முன்பின் தெரியாத ஆடவன் ஒருவன் ஆனால் ஒரு ஆணழகன் தங்களை நெருங்குவதைக் கண்ட அவர்கள், மிரட்சியுற்று அவ்விடம் விட்டு ஓட்டமாய் ஓடிவிடுகின்றனர். அவர்களிலே ஒருத்தித் தலைவியாகவும், மற்றொருத்தித் தோழியாகவும் இருக்கவேண்டும் என்று அவர்களின் நடையுடை நடிப்புகளிலிருந்து அவன் அறிந்துகொள்கிறான்.

அவனைக் கண்டவுடன் தலைவி மிரட்சிகொண்டு ஒடினாளேயொழிய, அவனது தோற்றப் பொலிவு அவளது உள்ளத்தை இரவு முழுவதும் குழப்பிக்கொண்டேயிருந்தது. மீண்டும் அவனைக் காணவேண்டும்போல் தோன்றிற்று. மறுநாள் மாலையும் அத்தலைமகன் பூம்பொழில் பக்கம் வரக்கூடும் என்று எண்ணி தோழியை அழைத்துக்கொண்டு அங்கு செல்கிறாள். அவனும் அம் மங்கை நல்லாள் வரக்கூடும் என்று கருதி பூம்பொழில் நோக்கி வருகிறான். இருவரும் எதிர்பார்த்ததுபோல் ஒருவரையொருவர் காண்கின்றனர்; கண்கள் ஒன்றோடொன்று பேசிக்கொள்கின்றன; ஆனால் வாய்விட்டுப் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை.

ஒருவரோடொருவர் பேசிப் பழகவேண்டும் என்ற ஆர்வம் இருவர் உள்ளத்திலேயும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது. தலைவன் மெல்ல தோழியின் நட்பைப் பெறுகிறான். தோழி, தலைவனிடத்தில் தான் பேசிக்கொண்டிருந்ததைத் தலைவியினிடத்திலும், தலைவியிடத்தில் பேசிக்கொண்டிருப்பதைத் தலைவனிடத்திலும் சொல்லுகிறாள். இருவரும் தனித்தனியே மகிழ்வுறுகின்றனர். சிலநாட்கள் கழிகின்றன. தோழி இருவர்க்கிடையே தூதுசென்றுவரவேண்டிய கட்டம் ஏற்படுகிறது. பிறகு இருவரும் பேசி மகிழ்ந்து கூடிக்குலாவி இருக்கும் நிலை வருகிறது.

தலைவனும் தலைவியும் காதலன் காதலியராகிப் பின் மணமகன் மணமகளாக விருப்பங்கொள்கின்றனர். அவ்விளைஞனும் அவ்விளையோளும் மணந்துகொள்வதை அவர்களது தாய் தந்தையர் ஒப்பமாட்டார்கள் என்ற உணர்வு அவர்களிருவர்க்கும் ஏற்படுகிறது. தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்தாலும் தாய்தந்தையர்கள் இசையமாட்டார்கள், தாங்கள் தொடர்ந்து அவ்வூரிலேயே இருந்தா

லும் தங்களது களவொழுக்கத்தைத் தாய் தந்தையர்கள் கண்டுகொண்டுவிடுவார்கள் என்பதாக எண்ணி அவ்விளங் காதலர்கள் ஊரைவிட்டு ஓடிப்போய்விடத் தீர்மானிக்கிறார்கள் ஒரு நாள் மாலை இந்தத் தீர்மானம் பூம்பொழிலிலே நிறைவேறுகிறது. மறுநாள் விடியற்காலத்திற்குள்ளாகத் தோழி தலைவியை அழைத்துக்கொண்டுவந்து தலைவன்பால் ஒப்பித்துவிடுவதென்றும், தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு விடிவதற்குள் வெளியூர் நோக்கிப் புறப்பட்டுவிடுவது என்றும் அவர்களுக்குள் கூடிக்கலந்து முடிவுக்கு வருகிறார்கள்.

மறுநாள் விடியற்காலை. தோழி தலைவியைப் பெற்றோர்க்குத் தெரியாமல் அழைத்துக் கொண்டு, ஓசையிடாமல், மெல்ல, பூம்பொழிலில் காத்துக்கொண்டிருக்கும் தலைவனிடம் வந்து சேர்கிறாள். தோழி தலைவியின் கையைப் பிடித்துத் தலைவன் கையோடு பிணைத்துவிடுகிறாள். அவர்களிருவரும் இணைந்து நிற்கும் காட்சி அவளுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. அவர்களை ஒரு முறை வலம்வந்து அவர்களது ஒத்த நலன்களைக் கண்டு பூரித்துப்போகிறாள்.

"போய்வருகிறோம்!" என்று சொல்லிக் காதலனும் காதலியும விடைபெறுகின்றனர்.

அப்பொழுது தோழி தலைவனைப் பார்த்து, "நீயோ, மலர்த்தோட்டங்கள் நிறைந்த நிலபுலங்கள் சூழ்ந்த ஊருக்கு உரிமையுடைய செல்வக்குடியிற் தோன்றியவன்! இவளோ உன்னை நம்பி உன் மொழியிடத்து மதிப்பு வைத்து உன்னைப் பின்தொடர்கிறாள்!......" என்று தோழி சொல்லிக்கொண்டிருக்கும் போது, "நான் ஒருநாளும் இவளைக் கைவிடமாட்டேன்; நீ உறுதியாய் என்னை நம்பலாம்!" என்று தலைவன் தோழிக்கு ஆறுதல் மொழி கூறுகிறான்.

தலைவனின் மொழி பிழைபடாத நல்ல மொழியாக விளங்கவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறத் தோழி முற்படும்போது, அவளுக்குப், பழையன் என்ற படைத்தலைவனின் தப்பாத வேற்படையின் நினைவு வருகிறது.

ஒருபொழுது கொங்கர் சோழமன்னரைப் பகைத்துக்கொண்டு, எதிர்த்து நின்று போராடக் கிளம்பினர். சோழமன்னரோ வலிமை மிக்கவர். அவரிடமோ நன்கு அழகு செய்யப்பட்ட திண்ணிய தேர்ப்படைகள் இருந்தன. அவரது படைவீரர்களோ இனிமையையும், கடுப்பையும் தரும் கள்ளுணவைச் சாதாரண நாட்களிலேயே ஓயாமல் உண்டுகொண்டிருப்பவர்கள் என்றால், போர்க்காலத்தில் சொல்லவும் வேண்டுமா? சோழமன்னர் இப்படிப்பட்ட சூழ்நிலையைக் கொண்டவராக இருந்தபோதிலும், கொங்கரைப் பணியவைக்க, போர் என்னும ஊருக்கு உரிமையுடையவனாக இருந்த பழையன் என்ற படைத்தலைவனின் வேற்படையின் உதவி தமக்குத் தேவை என்று எண்ணினர். யானைப்படைகளை மிகுதியாகக்கொண்டிருந்த பழையனின் கையிலேந்தியிருந்த வேற்படை தப்பாத தன்மையையுடையது என்று கருதியதால்தான் சோழமன்னரே அவனது வேற்படையைப் பெற்றுக் கொண்டு சென்று கொங்கரைப் பணியவைத்தனர். பழையன் அவ்வளவு ஆற்றல் மிக்கவன். அவனது வேற்படை எந்தப் போரிலும் தப்பியதில்லை; எப்பொழுதும் வெற்றி வாகையே சூடிற்று. பழையனின் வேற்படை எப்படிப் பிழை செய்யாது நல்ல படையாக விளங்கிற்றோ, அப்படியே தலைவனின் மொழியும் பிழைபடாது நல்ல மொழியாக விளங்கவேண்டும் என்பதைத் தலைவனுக்கு உணர்த்த விரும்புகிறாள் தோழி.

அந்தக் கருத்தை மனதிற்கொண்டுதான், "பழையனின் தப்பாத வேற்படையைப் போல, உன்னுடைய மொழி நல்ல மொழி என்றும், அது பிழைபடாது என்றும் நம்பியிருக்கிறாள் இவள்! உன்னுடைய கூற்று உண்மையெனத் தெளிந்த உள்ளத்தோடு இருக்கிறாள் இவள்! இவளைப் பாதுகாக்க வேண்டியது உன்னுடைய கடமை!" என்று தோழி கூறுகிறாள்.

"நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்! இவளை ஒருநாளும் நான் கைவிடமாட்டேன்" என்று தலைவன் மறுமொழி பகர்கிறான்.

அதுகேட்ட தோழி, தனது வேண்டுகோள் அவன் உள்ளத்தில் நன்கு பதியவேண்டும் என்று கருதி, மேலும் உருக்கமாகக் கூறுகிறாள், "தலைவனே! இவளது அண்ணாந்து உயர்ந்த அழகிய மார்புகள் தளர்ந்தாலும், இவளது பொன்போன்ற மேனியிலே, கருமணிபோலத் தாழ்ந்த நல்ல நீண்ட கூந்தல் நரையுடனே முடிக்கப்பெற்றாலும், அக்காலத்திலும், இவள் நமது முயக்கத்திற்குப் பயன்படமாட்டாள், வயது முதிர்ந்துவிட்டாள் என்று எண்ணாமல், இவளைக் கைவிடாமல், நீ பாதுகாக்கவேண்டும்! அதுதான் உன்னிடம் நான் வேண்டிக்கொள்வது!" என்று.

தலைவன் சிரித்துக்கொண்டே "நான் சொல் தவறமாட்டேன்; இவளைக் கைவிடமாட்டேன்-கைவிடமாட்டேன்— கை வி ட மா ட் டேன்! போதுமா?" என்று வினவுகிறான். தலைவன் தலைவியைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிறான்; தலைவி தோழியைப் பார்த்துப் புன்முறுவல் கொள்கிறாள்; தோழி இருவரையும் பார்த்துப் பூரித்துப்போகிறாள். இந்த நிலையில் காதலனும் காதலியும் தோழியை விட்டுப் பிரிகிறார்கள்; தோழி வீடுநோக்கித் திரும்புகிறாள்.

∴ ∴ ∴

நற்றிணை 10-ஆம் செய்யுளின் உட்கருத்தே மேலே சொல்லோவியமாகத் தீட்டிக்காட்டப் பட்டிருப்பதாகும். இந்தச் செய்யுளை பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை.

∴ ∴ ∴

அண்ணாந்(து) ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!
இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த்(து) அன்னநின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.

[நற்றிணை—10]

[பூக்கேழ் ஊர, வேல் வாய்த்தன்ன பிழையா நன்மொழி தேறிய இவட்கே தளரினும் முடிப்பினும் நீத்தல் ஓம்புமதி என்று கொண்டு கூட்டி முடிக்கவும்.

பொழிப்புரை: மலர்கள் விளங்கிய பொழில் சூழ்ந்த ஊரையுடையோனே! இனிமையையும் கடுப்பையும் உடைய கள்ளையும், இழைக்கப்பட்ட அணிகளால் அழகுபடுத்தப்பட்ட நெடிய தேர்களையும் உடைய வலிமிக்க சோழமன்னர், கொங்கரை அடக்கும்பொருட்டு, வெண்மையான கொம்புகளையுடைய யானைகளைக் கொண்ட போஒர் என்னும் ஊரின் தலைவனும் படைத்தலைவனுமான பழையன் என்பானிடத்துத், தப்பாத வேற்படையைப் பெற்று வைத்திருந்தாற்போன்ற உனது பிழைபடாத நல்ல மொழியைக் கேட்டு, உண்மையெனத் தெளிந்த இவளுக்கு, அண்ணாந்து உயர்ந்த அழகிய மார்புகள் தளர்ந்தாலும், பொன்போன்ற மேனியிலே கருமணிபோலத் தாழ்ந்த நல்ல நீண்ட கூந்தல் நரையுடனே முடிக்கப்பெற்றாலும், அக்காலத்து இவள் நம்முயக்கத்துக்குப் பயன்படாது முதுமையடைந்துவிட்டாள் என்று எண்ணி இவளைக் கைவிடாதே ஏற்றுக்கொள்வாயாக! இவளைப் பாதுகாத்து வருவாயாக! அண்ணாந்து-நிமிர்ந்து; வனம்-அழகு; மணியில்-கருமணியைப்போல; ஓம்பு-பாதுகாப்பாயாக; கடுங்கள்-கடுப்பேறிய முற்றியகள்; பணீஇயர் - பணியவைக்க; தேறிய-தெளிந்த.]

காதலன் காதலியர் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பதும், தமது களவொழுக்கம் தாய் தந்தையர்க்குத் தெரியுமோ என்று அச்சங் கொள்வதும், தாய் தந்தையர் தங்கள் திருமணத்திற்கு எதிராக நின்றுவிட்டால் என்ன செய்வது என்று திகைப்பதும், தோழியின் உதவியாலோ அல்லது தோழன் உதவியாலோ வெளியூருக்கு இரவோடிரவாக ஓடிப் போக எண்ணுவதும் ஆன கட்டங்கள் இக்காலக் காதலர் வாழ்க்கையிலும் நிகழக் காண்கிறோம். இந்தக் காட்சிகள் பண்டைக்கால வாழ்க்கையிலும் மிகச்சிறந்து காணப்பட்டன

என்று அறியும்போது வியப்புணர்ச்சி தோன்றுகிறது.

பெண் அழகாக இருக்கும்போது அவளைக் காதலித்து, அவள் அழகு குன்றும்போது அவளைக் கைவிட்டுவிட்டு வேறு பெண்களிடம் நட்புக்கொள்ளும் கயமைப்பண்பு தலைவனிடத்தில் தோன்றக்கூடாது என்பதை வற்புறுத்தவும், தலைவியை எந்த நிலையிலும் அவன் கைவிடக்கூடாது என்பதை வலியுறுத்தவும், தோழி "அண்ணாந்து உயர்ந்த அழகிய மார்புகள் தளர்ந்தாலும், பொன் போன்ற மேனியில் கருமணிபோலத் தாழ்ந்துகிடக்கும் நீண்ட கூந்தல் நரையாக மாறி முடிக்க நேரிட்டாலும் நீ இவளைப் பாதுகாப்பாயாக!" என்று தலைவனிடம் கூறும் கூற்று, இயற்கைப் பண்பை உணர்த்துவதாயும், நெஞ்சு உருக்கம் பயப்பதாயும், பொருளாழங்கொண்டதாயும் விளங்குவதாகும். இப்படித் தோழியின் கூற்றில் ஆசிரியர் பொதியவைத்துள்ள "கிழவியானாலும் கைவிடாதே" என்ற நயப்பாடு படித்துப் படித்து இன்புறுதற்குரியதாகும்.

இந்தச் செய்யுளை பாடிய புலவர் பழையன் என்ற படைத்தலைவனால் பெரிதும் ஆதரிக்கப் பட்டுவந்திருக்கிறாரென்றும்; புலவர் பழையனிடத்தில் அளவுகடந்த பற்று கொண்டிருந்திருக்கிறார் என்றும் எண்ணவேண்டியிருக்கின்றது. பழையனின் ஆற்றலையும், பெரு மையையும் உலகுக்கு எடுத்துக்காட்ட ஏற்ற வொரு இடத்தைப் பயன்படுத்திக்கொண்டார் புலவர். கொங்கரை யழிக்க, வலிமிக்க சோழ மன்னரே பழையனின் வேற்படையின் உத விபை நாடினர் என்று குறிப்பிடுவதன்மூலம் பழையனின் பெருமையையும், அவன் வேற் படை தப்பியதில்லை என்று கூறுவதன் மூலம் அவனது ஆற்றலையும் புலவர் அழ குறப் புலப்படுத்துகிறார். பழையனின் வேல் எப்படித் தப்பாதோ, அப்படித் தலைவனின் சொல்லும் தப்பாது—தப்பக்கூடாது என்ப தைத் தோழி கூறுவதாக வைத்திருக்கும் நயம் சுவைக்கவேண்டியதொன்றாகும்.

உடலின் நிறத்திற்குப் பொன்னையும், கூந் தலின் நிறத்திற்குக் கருமணியையும் உவமை யாக்கியிருப்பது மிக்கப் பொருத்தமாகும்.

கொங்கரைச் சோழர் அடக்கிய வரலாற்றுச் செய்தி இச்செய்யுளின் மூலம் தெளியப்பெறு கின்றது.

தோழியே தலைவன் தலைவி கைகளைப் பிடித்து இணைத்துவிட்டு, அவ்வளவில் திரு மணத்தை நடத்தி, அவர்களை வழியனுப்பும் தன்மை போற்றி வியத்தற்குரியதாகும்.

கேட்டது தகுதி—பெற்றது தண்டனை

பண்டித சவகர்லால் நேரு தமது 12-வது அகவையிலே கல்வி பயில இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் மட்டுமே பயிலும் ஆரோவிலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ந்த படித்தார். அங்கு அவருக்கு ஏற்பட்ட வியப்புக்குரிய நிகழ்ச்சிபற்றி வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு.

ஆரோவிலுள்ள மாணவர்கள் பணம்படைத்தோராக இருந்தபோதிலும், அவரவர்களது பூட்சுகளை அவரவர்களே தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது நடைமுறையில் இருந்துவந்த முறையாகும். ஒருகால் பண்டித மோதிலால் நேரு தம் மகனைப் பார்க்க அங்குச் சென்றிருந்தார். அப்பொழுது சவகர்லால் நேரு தம்முடைய பூட்சுகளைத் தாமே தூய்மைபடுத்திக்கொண்டிருந்ததைப் பார்த்தார். தாம் அருமையாகப் போற்றிவளர்த்த செல்வச் சிறுவன் பூட்சு துடைத்துக்கொண்டிருக்கும் காட்சியைக் காணப்பொறுக்கவில்லை; மனம்நொந்தார். பூட்சு துடைப்பதற்கென்று ஒரு வேலைக்காரனை வைத்துக்கொள்வதற்கான அனுமதியை உரிய ஆசிரியரிடம் பெறும்படித் தந்தையார் மகனிடம் கூறினார். அப்படியே சவகர்லால்நேரு ஆசிரியரிடம் அனுமதி கேட்டாராம். ஆசிரியர் அது பள்ளிக்கூட ஒழுங்கு முறைக்கு மாறுபாடான செயல் என்றும், இச்சிறு வேலைகளைச் செய்ய வேலைக்காரனை எதிர்பார்க்கலாகாது என்றும் கூறியதோடு, அவ்வாறு கேட்டதற்குத் தண்டனையாக மற்றுஞ் சில மாணவர்களின் பூட்சுகளையும் சேர்த்துத் துடைக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டாராம். தோழர் சவகர்லால் நேரு அவர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றவேண்டி ஏற்பட்டதாம்!

பழனி ஆண்டவன்?

[இரா. நெடுஞ்செழியன்]

பழனி ஆண்டவன் யார் என்று கேட்டால், பழனிமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் 'சுப்பிரமணிய சுவாமி' என்று வைதீகர்கள் கூறுகிறார்கள். அவர்தான் 'முருகக் கடவுள்' என்றும், 'தண்டபாணி' என்றும், 'தண்டாயுதபாணி' என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார் என்றும் சொல்லுகிறார்கள்.

பழனிமலைக் கோயிலுக்குச் சென்று, அங்குள்ள ஆண்டவனைப் பார்த்தால், அவர் மற்றெல்லா கோயில்களிலும் காட்சிதரும் தோற்றத்தோடு அங்குக் காட்சியளிப்பதில்லை; வேறு தோற்றத்தில் காட்சியளிக்கிறார். பொதுவாக எல்லாக் கோயில்களிலும், சுப்பிரமணியர், ஆறு தலையும், பன்னிரண்டு கையும் உடையவராய், வள்ளியையும், தெய்வயானையையும் இருபுறமும் கொண்டு, மயிலேறும் பெருமாளாகக் காட்சியளிப்பார்; ஆனால் பழனி மலையிலேயோ முக்கியமான ஆண்டவனாகக் கருதப்படும் சிலை, நேர்மாறான வேறு தோற்றத்தில் காட்சியளிக்கிறது. கையிலே தடியும், அரையிலே கோவணமுங் கொண்ட மொட்டைத்தலைப் பண்டாரம்போல் பழனி ஆண்டவன் காணப்படுகிறார். வேறு பல தோற்றங்களோடு கூடிய சுப்பிரமணியர் சிலைகள் அங்குக் காணப்படுகின்றன என்றாலும், முக்கியமான சிலையாகக் காணப்படுவது, இந்தக் கோவணாண்டிச் சிலைதான்.

அந்தச் சிலை ஒன்பது நச்சுக்கற்களால் (நவபாஷாணங்களால்) செய்யப்பட்டது என்றும், அதன்மீது ஐந்தமுதை (பஞ்சாமிர்தத்தை)த் தடவி எடுத்து உண்பது நல்லது என்ற கருத்து நிலவி வருகிறது என்றும் சொல்லப்படுகின்றன.

வேறு எந்தக் கோயிலிலும் இல்லாதபடிக்கு இந்தக் கோயிலிலே மட்டும் முக்கியமான கடவுள் சிலை கோவணாண்டிச் சிலையாகக் காணப்படுவதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், சுப்பிரமணியக் கடவுள் கோவணாண்டிக் கோலம் பூண்டார் என்றும், அதற்குக் கதைகள் உண்டென்றும் பொதுவாக வைதீகப்பாமரமக்கள் கூறுகிறார்கள்.

பழனியாண்டவர், பண்டாரக்கோலத்தில் நிற்பதற்கான காரணத்தை விளக்கிச் சொல்லும் கதை, சுப்பிரமணியர்பற்றிக் கூறும் முக்கியமான புராணமான கந்தபுராணத்திலோ அல்லது பிற புராணங்களிலோ இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெளிந்து கூறுகின்றனர். எனவே பழனிமலைச் சுப்பிரமணியர் பண்டாரக் கோலம் பூண்டதாக எந்தப் பண்டையப் புராணமும் கூறவில்லை என்பது தெளியப் பெறுகிறது. அதாவது, முருகக்கடவுள் பண்டாரக் கோலம் மேற்கொண்டது புராணங்களுக்குத் தெரியாத ஒன்று என்பது தெற்றென விளங்குகிறது.

ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நக்கீரர் பாடியதாகச் சொல்லப்படும் திருமுருகாற்றுப்படையில், பழனிமலையைப்பற்றிய குறிப்புகளும், அந்த மலையில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள் பற்றிய குறிப்புகளும் காணக்கிடக்கின்றன. திருமுருகாற்றுப்படையில், பழனி, திருவாவினன்குடி என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. திருவாவினன்குடியில் முருகன் எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதை நக்கீரர் தெள்ளத்தெளிய கூறுகிறார்.

" தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலுமுரியன் "

[தா இல் - வருத்தமில்லாத; கொள்கை - அருட்கற்பினையுடைய; மடந்தையொடு - தெய்வயானையருடன்; ஆவினன்குடி - ஆவினன்குடி என்னும் ஊரிலே; சின்னாள் - சிலநாட்கள்; அசைதலும் உரியன் - இருத்தலும் உரியன்.]

முருகன் தெய்வயானையரோடு சேர்ந்திருந்து காட்சியளிக்கும் தோற்றந்தான் திருமுருகாற்றுப்படையில் குறிக்கப்பட்டிருக்கிறது. முருகன் பண்டாரக்கோலத்தோடு காட்சியளிக்கிறார் என்ற குறிப்பு ஓரிடத்திலும் திருமுருகாற்றுப்படையில் கூறப்படவில்லை. முருகனின் ஆறு படைவீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்

சோலை ஆகிய இடங்களின் சிறப்புகள் பற்றியும், ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளின் அருமை பெருமைகள் பற்றியும் கூறிடும் நக்கீரர், பழனி மலையில் கோவணாண்டிக்கோலம் பூண்டிருக்கும் தன்மையைப்பற்றிச் சொல்லாமல் விட்டிருப்பாரா? இப்பொழுது பழனிமலை ஆண்டவனின் தனிச் சிறப்பைப் பற்றிக் கேட்டால், எல்லா பக்தர்களும் கூறுவார்கள், அவர் ஆண்டிக்கோலம் பூண்டவர், கையிலே தடியிருக்கும். அரையிலே கோவணம் இருக்கும், தலை மொட்டையாய் இருக்கும், அவர் நவபாடாணத்தால் செய்யப்பட்டவர் என்று. ஆனால் நக்கீரர் இந்தத் தனிச் சிறப்புகளை ஏன் சொல்லாமல் விட்டார்? சொல்லாமல் விட்டார் என்பது மட்டுமல்ல, ஆண்டிக்கோலத்திற்கு நேர்மாறான கோலத்தில், அதாவது தெய்வயானையாருடன் இணைந்திருக்கும் கோலத்தில் இருந்தார் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், திருமுருகாற்றுப்படை பாடிய காலத்தில் பழனி மலையில் பண்டாரக்கோலம் பூண்ட சிலை இல்லை என்பது விளங்கும். முக்கியமான புராணங்களாவது பண்டாரக்கோலத்திற்குச் சான்று பகர்கின்றனவா என்றால் அதுவும் இல்லை. இவற்றிலிருந்து என்ன பெறப்படுகின்றது என்றால், கோவணாண்டிச் சிலை இடைக்காலத்தில் பழனிமலையில் ஏறியிருக்கிறதேயொழிய, தொன்றுதொட்டு இருந்துவருவதொன்றல்ல என்பதாகும்.

'கோவணாண்டி'க்கும் 'சுப்பிரமணியரு'க்கும் ஏதாவது தொடர்புண்டு என்று புராணங்கள் கூறுகின்றனவா என்றால், இல்லை! கூறமுடியாது! ஏனெனில், உள்ளபடியே இரண்டு பேரும் ஒருவரேயல்ல, 'கோவணாண்டி' வேறு, 'சுப்பிரமணியர்' வேறு!

இன்று பழனிமலையில் வைத்து வைதீகர்கள் பலரும் கும்பிடும் **கோவணாண்டிச் சிலை** உள்ளபடியே சுப்பிரமணியக்கடவுள் சிலையல்ல, அது யாரோ ஒரு சிறந்து விளங்கிய **சித்தர்சிலை**யாகத்தான் இருக்கவேண்டும். ஒருகால், அது சிறந்த சித்தர் என்று பேர்பெற்று விளங்கியவரும், சித்த மருத்துவத்துறையில் கற்றுத்துறைபோயவரும். பழனிமலையிலேயே தங்கியிருந்தவருமான **போகர்** என்ற சித்தரின் சிலையாக இருக்கக்கூடும் அல்லது போகரே அவருக்கும் முற்பட்ட சிறந்த பேர்போன சித்தர் ஒருவரின் சிலையாக அதனை நிலைநாட்டியிருக்க வேண்டும். சித்தர் மருத்துவம் என்பதுதான் சித்தமருத்துவம் என்று ஆயிற்று என்பர். ஒன்பது நச்சுக்கற்களை (நவ பாஷாணக்கற்கள்) அடிப்படையாகக்கொண்டு மருந்துகள் செய்யும் முறை சித்தமருத்துவத்தைச் சார்ந்ததாகும். 'பழனி ஆண்டவன்' ஒன்பது நச்சுக்கற்களால் செய்யப்பட்டதாகும் என்று சொல்லப்படுவதாலும், 'அவன்' கோவணாண்டிக் கோலத்தில் காணப்படுவதாலும், 'அவன்' தொன்றுதொட்டு இல்லை என்று பெறப்படுவதாலும், 'அவன்' இடைக்காலத்தில்தான் தோற்றமளிக்கத் துவங்கினான் என்று காணக்கிடப்பதாலும், அந்தப் **பழனிஆண்டவன் சிலை** ஒரு **சித்தர் சிலை**யேதான் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

பொதுவாகப் பதினெண் சித்தர்களின் தோற்றம் எப்படியிருந்திருக்கக்கூடும் என்று ஊகித்தறியும்போது, அவர்களது பரம்பரையில் குரு-சீட முறையில் வழிவழிவந்தவர்களாகக் கருதப்படுபவர்களின் தோற்றம் போல்தான் இருந்திருக்கவேண்டும் என்று எண்ண இடமேற்படுகின்றது. பொதுவாக அவர்களது தோற்றம்: தலை மொட்டை—கையிலே தடி—அரையிலே கோவணம்! இத்தகைய தோற்றத்திலேயே 'பழனி ஆண்டவன்' காணப்படுவதால், 'அவன்' ஆண்டவன் அல்லன், ஒரு 'சித்தன்' என்பதை அறிந்து கொள்ளலாம்.

மேலும் திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதப்போந்த நச்சினார்க்கினியர், 176-வது அடியில் வரும் 'ஆவினன்குடி' என்பதற்கு விளக்கவுரை பகரும்போது, "**இனிச் சித்தன் வாழ்வு என்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி என்று பெயர்பெற்றதென்றுமாம்**" என்று குறிப்பிடுகிறார். நக்கீரர் காலத்தில் ஆவினன்குடி என்று வழங்கிய ஊர், நச்சினார்க்கினியர் காலத்தில் **சித்தன் வாழ்வு** என்று ஆகியிருந்திருப்பதை அறிகிறோம். அந்த மலையில் சித்தன் வாழ்ந்த காரணத்தாலோ அல்லது சித்தன் சிலை வாழ்வுபெற்ற காரணத்தாலோ **சித்தன் வாழ்வு** என்று பெயர்பெற்றிருக்கவேண்டும் என்று எண்ணுவது தவறாகிவிடாது. **சித்தன்** என்ற சொல்லுக்குப் பிள்ளையார் என்றோ, அல்லது முருகன் என்றோ பொருளுரைத்துக்கொள்வதைவிட, **சித்தர்** என்று பொருளுரைத்துக் கொள்வதுதான் வரலாற்றுண்மைக்குப் பொருந்தி வருவதாகவும், நேரிடையாகச் சுட்டிக்காட்டுவதாகவும் அமைந்திருக்கிறது என்க. அந்தச் சித்தன் வாழ்வு இப்பொழுது **பழம்நீ** அல்லது **பழனி** ஆகிவிட்டிருக்கிறது.

பழனி மலையில், நீண்ட காலமாக, முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கிறார் அதுவும் தெய்வயானையாரோடு எழுந்தருளியிருக்கிறார் என

காணிக்கை!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அரு: ஏகலைவனின் வில்திறமை நமக்குத் தெரியாது என்ற காரணத்தினால் நாம் ஒதுங்கி நின்றுவிட வேண்டுமா? அவன் உண்மையில் வில்லில் திறமைசாலி என்றால், இதற்கு முன்னதாகவே என் போன்ற வில்வீரர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! பிரபு! பீஷ்மரையும் துரோணரையும் எதிர்த்து நின்று பின்னடையச்செய்த நான், இந்த ஏகலைவனுக்கு எதிர்ப்புக் காட்டாமல் போய்விடுவதா? எதிர்ப்பு இல்லாததால், அவன் அங்கு புயல்போலப் புகுந்துவருகிறான், அதைப் பார்த்துக்கொண்டு நான் இங்கு பேசாமல் இருக்கவேண்டுமா!

இரு: அதுதான் விவேகம்!

அரு: எது விவேகம்? பரமாத்மா! பலரும் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்குமளவு, வில்வீரன் விஜயன் களத்தைவிட்டு ஓடி வந்தானே, அந்தக் கோழைத் தனத்தை விவேகம் என்று சொல்லுகிறீர்கள்?

இரு: நீதானே சொன்னாய், ஏகலைவன் புயல் போலப் புகுந்துவிட்டான் என்று! புயல் வீசும்பொழுது பேசாமல் அடங்கியிருப்பதுதான் விவேகம்!

அரு: பிரபு! நான் சொன்னதை வைத்தே என்னைக் கேலிசெய்கிறீர்களா? புயல்! காட்டுமிராண்டியாகத் திரிந்த அந்தச் சிறு பயல், களத்திற்கும் புயலாகிவிட்டான்; காரணம் எதிர்ப்பு எதுவுமில்லாததால்! புயல் மரத்தைச் சாய்த்துச் செல்லும், ஆனால் மலையை மீறிச் செல்ல

நம்பிக்கை இருந்துவந்திருக்கிறது. பழங்காலந் தொட்டு முருகக்கடவுள் வழிபாடு நடைபெற்றுவந்த அந்தப் பழனிமலையிலேயே, பிற்காலத்தில், சித்தர் சிலையும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. ஒன்பது நச்சுக் கற்களால் (நவபாஷாணம்) பக்குவமாய்ச் செய்யப்பட்ட அந்தச் சிலையின்மீது, சித்த மருத்துவ முறைக்கேற்ப, ஐந்தமுதை (பஞ்சாமிர்தத்தை)த் தடவி எடுத்து உண்டால், உடலுக்கு நல்லது என்ற முறையைச், சிலை நாட்டிய சித்தர்கள் பழக்கப்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் உண்மை நிலையை அறிந்துகொள்ளமாட்டாத பிற்கால மக்கள், 'சித்தர் சிலை'யும், 'சுப்பிரமணியர் சிலை'யும் ஒரு கடவுளின் இருவேறு உருவங்கள் என்று மயங்கி எண்ணிக்கொண்டு, கோவணாண்டித் தோற்றம், சுப்பிரமணியருடைய அவதாரம் என்று கதைகட்டிக்கொள்வாராயினர்.

இப்பொழுதுகூட இறந்தவர்கள் கல்லறையின்மீது 'சிவலிங்கத்தை' நிலைநாட்டி அதனை வழிபடத் தொடங்கி, நாளடைவில் அதனைக் கோயிலாக்கிப், பிறகு சிவபெருமான் கோயிலாகக் காட்சியளிக்கும்படி செய்வதைப்போல, சித்தர் சிலையையும் நாளடைவில் சுப்பிரமணியராக ஆக்கிவிட்டார்கள் போலும்.

இப்பொழுது பழனிமலையில், கோவணாண்டிச் சிலையைத் தவிர்த்து இருக்கும் வேறு பல சிலைகளும், பழனிமலைக் கோயிலின் அமைப்பும் இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்த நிலைமையில் இல்லை. எவ்வளவோ தடவைகள், எத்தனையோ மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு இன்றுள்ள நிலையை எய்தியிருக்கின்றன. அப்படிப்பட்ட மாறுதல்கள் சித்தர் சிலையைச் 'சுப்பிரமணியர் சோதி'யில் கலக்கச் செய்திருக்கக்கூடும், எனவே பிற்கால மக்கள் சித்தர் சிலையையும் சுப்பிரமணியர் என்றே எண்ணத் தொடங்கிவிட்டனர் என்று சொல்லுதற்கும் இடமிருக்கிறது.

எனவே 'முருகக்கடவுள்' என்று நினைத்து வைதீகமக்கள் வழிபடும் **கோவணாண்டிச் சிலை** முருகக்கடவுள் அல்ல, யாரோ ஒரு **சித்தர் சிலை**யாகத்தான் இருக்கவேண்டும் என்பது தெளியப்படும்! ●

முடியாது! ஆனால் கிருஷ்ணபரமாத்மா, "புயல் வருகிறது ஆதலால் மலையே நீ விலகினில்!" என்று மலையைப்பார்த்துச் சொல்லுகிறார்!

கிரு : ஆத்திரமடையாதே, அருச்சுனா! புயலும் வெகுநேரம் அடித்துக்கொண்டிருக்க முடியாது! அது ஓய்ந்துவிடச் சற்று அவகாசம் கொடு.

அரு : அவகாசம் கொடுத்தது போதும், நான் போகிறேன்! புயலை எதிர்த்து மற்றொரு புயலை நான் வீசச் செய்கிறேன்!

கிரு : இப்பொழுது போகவேண்டாம்!

அரு : என்னைத் தடுக்காதீர்கள்!

கிரு : சற்றுப் பொறு!

அரு : பிரபு! எவ்வளவு நாழிகைப் பொறுத்துக்கொண்டிருப்பது? பாண்டவ சேனை முழுவதும் அழிந்துவிட்டபிறகா நான் களத்திற்குப் போகவேண்டும்! எதிர்ப்பு வரும்பொழுது எதிர்நின்று போராடாமல் ஓடி ஒதுங்குவதென்றால், அன்று துரியோதனன் அரசமண்டபத்தில் பாண்டவர்களாகிய நாங்கள் எடுத்த சபதங்களை மறந்திருக்கவேண்டும்! பாஞ்சாலி அவிழ்த்த கூந்தலை மறந்துவிடவேண்டும்! பாண்டவர்கள் பெரும் சேனாபலத்தைத் தேடியிருக்கவேண்டாம், குருக்ஷேத்திர யுத்தமும் தேவைப்பட்டிருக்காது! ஏகலைவன் முன்னால் கோழையென்று பணிவதைவிட, துரியோதனாதியர் காலடியில் வீழ்ந்து பிச்சையெடுத்திருக்கலாம்! பீமசேனர் கையில் கதையும், என் கையில் காண்டிபமும் எதற்காக? வில்லைக் காட்டி வீரமுழக்கம் செய்வதற்குப் பதில், பல்லைக்காட்டிப் பிழைத்திருக்கலாம்! பொறுத்திருந்தது போதும்! நான் போகிறேன், என்னை யாரும் தடுக்க வேண்டாம்!

கிரு : அருச்சுனா! அவ்வளவு பிடிவாதத்துடன் செல்லாதே! ஏகலைவனின் வில் வலிமை தெரியாமல் நீ இங்கு ஆர்ப்பாட்டத்துடன் பேசுகிறாய்! நான் மட்டும் லாகவமாகத் தேரைத் திருப்பியிராவிட்டால், நிஷாதபுத்திரனின் முன் போராட முடியாமல், நிலைகுலைந்து நீ ஓடிவந்திருப்பாய்! அந்த நிலைமையை உண்டாக்க நான் அனுமதிக்கவில்லை. ஏகலைவனை ஏதோ காட்டுவாசி, வில்வித்தை தெரியாதவன் என்று ஏளனத்துடன் பேசுகிறாய். இன்னும் உண்மையைச் சொல்லட்டுமா? உன்னைப்போல் பத்து அருச்சுனர்கள் ஒன்று கூடி எதிர்த்தாலும், ஏகலைவன் ஒருவனுக்கு ஈடுகொடுக்கமுடியாது!

அரு : பிரபு! கிருஷ்ணபரமாத்மா! யுத்தகளத்திற்குப் போகவேண்டாமென்றால் நின்றுவிடுகிறேன். ஆனால் அதற்காக அருச்சுனனால் ஏகலைவனுக்கு ஈடுகொடுக்கமுடியாது என்ற பயத்தை உண்டாக்காதீர்கள்! ஏகலைவனுக்கு என்னால் ஈடுகொடுக்கமுடியவில்லையென்றால், வில் விஜயன் என்ற பெயர் எதற்கு? கையில் காண்டிபமும், தோளில் பாசுபதாஸ்திரமும், எதற்கு? பிரபு! ஏன் இப்படி என்னை ஏளனம் செய்து வேடிக்கை காட்டுகிறீர்கள்?

குரு : வேடிக்கையல்ல. இன்னமும் ஏகலைவனைப்பற்றி உனக்கு முழுவிவரமும் தெரியாது, ஏகலைவனுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்கள் இந்த குருக்ஷேத்திர யுத்தகளத்தில் யாரும் கிடையாது! இந்த யுகத்திலும் யாரும் இல்லை! இதற்கு முந்திய யுகத்தில், அதாவது திரேதா யுகத்தில் இரகு வம்சத்தில் பிறந்த கோதண்டராமன் ஒருவரை வேண்டுமானால் சமமாகச் சொல்லலாம்!

அரு : ஸ்வாமி! பரமாத்மா! உண்மையாகவா? ஸ்ரீராமபிரானுக்கு இணையான வில்வீரனா இந்த ஏகலைவன்? அதை நீங்களே சொல்லுகிறீர்களே! அப்படியானால், ஏகலைவனை எதிர்த்து நின்று வெற்றிகாண முடியாதா?

கிரு : நிச்சயமாக முடியாது! வில்வித்தையில் ஏகலைவனை எதிர்த்து நின்றால், தோல்வியடைவது நிச்சயம்!

அரு : ஸ்வாமி! இதற்கென்ன செய்வது? இவ்வளவு பெரிய வில்வீரனாக ஏகலைவன் வருவான் என்று தெரிந்திருந்தால், அப்பொழுதே அவனை என் சிநேகிதனாக வரித்து, நமது பக்கத்தில் வைத்திருப்பேன்! பின்னால் வரப்போவது தெரியாமல் அசட்டுத்தனமாக அவனை விரட்டியடித்து, வீண் பகையை வளர்த்துக்கொண்டேன். அவனை நமது பக்கம் திருப்பிக்கொள்ள முடியுமா?

கிரு : அர்ச்சுனா! ஏகலைவனை அப்படித் திருப்பிவிடுவது சாத்யமல்ல! அவன் சத்திய விரதன், கொடுத்த வாக்கை எப்படி

னும் காப்பாற்றுபவன்! கர்ணன் அழைப் பின்பேரில் அவன் வந்திருக்கிறன். அதை மீறி அவன் எதிர்ப்பக்கம் வரமாட் டான்! கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கட்டைவிரலை அரிந்து தந்த அவன் இப் பொழுது களத்தில் மாறிவிடுவான் என்று சொல்லமுடியாது!

அரு: பரமாத்மா! பின் எப்படி அவனைச் சமாளிப்பது? அவனை நம் பக்கம் சேர்த் துக்கொள்ளவும் முடியாது, எதிர்த்து வெற்றி பெறவும் முடியாது!

கிரு: எதிர்த்து நின்றல், தோல்வி நிச்சயம்!

அரு: அப்படியானல் என்ன செய்வது?

கிரு: எதிர்த்து நிற்கவேண்டாமென்கிறேன்!

அரு: பிரபு! தங்களுடைய உபதேசம் என் குழப்பத்தை அதிகமாக்குகிறது! யுத்த களத்தில் அவனை எதிர்த்து நிற்காவிட் டால், பாண்டவ சேனை முழுவதையும் அவன் ஹதம் செய்துவிடுவான்! பாண் டவர்கள் தோல்வியடைவதைப் பார்த் துக்கொண்டிருக்கவேண்டும்! பாண்டவர் களின் முழக்கமும், பாஞ்சாலியின் சபத மும் எல்லாம் வீணுகிவிடும்! பரமாத்மா! பாண்டவர்களுக்கு இதுவரை ரட்சகராக இருந்தவர் தாங்களே! இதுசமயம்! எங் கள்மீது கருணைவைத்து, நீங்களே இந்த ஏகலைவனைத் தோற்கடிக்கவேண்டும்! உங் களால் மூவுலகிலும் முடியாதது ஒன் றில்லை!

கிரு: அர்ச்சுனு உன் பிரார்த்தனை வேடிக்கை யாக இருக்கிறது! உனக்குத் தேர்ச்சாரதி யாக நான் வந்தேனேயொழிய ஆயுத மெடுத்துப் போர்புரிய நான் வரவில்லை! யுத்த தர்மத்தில் அது கூடாது!

அரு: வேறு என்ன செய்யலாம்? (வெளியில் சத்தம் கேட்கிறது). ஸ்வாமி! ஏகலைவன் முன் நிற்கமாட்டாமல், பாண்டவ சேனை முழுவதும் சிதறி ஓடிவிட்டது! சீக்கிரம் ஒரு வழி சொல்லுங்கள்! உங்களை நம்பி தான் பாண்டு புத்திரர்களாகிய நாங்கள் இந்தப் பெரும்போரை நடத்த வந்தோம்! ஏகலைவனை எதிர்க்கவேண்டாமென்கிறீர் கள். பின் எப்படி அவனை வென்று, கௌரவ சேனையை வெல்லமுடியும்?

கிரு: பார்த்திபா! முன்னம் ஏகலைவனுக்குச் சப்தாஸ்திர வித்தை தெரிகிறது என்ற தும், நீயும் துரோணரும் அவனை எதிர்த்து நின்று போராடினீர்கள்? எதிர்த்து நின்றல் வெற்றி கிடைக்காது என்று தெரிந்ததும், வில்வித்தைக்குப் பிரதானமாக இருக்கும் கட்டைவிரலை வாங்கினீர்கள்!!

அரு: வாங்கினோம்! ஆனல் கட்டைவிரலை வாங்கியும்,இன்று அவன் வில்லைத் தூக்கி வந்து, நமக்குத் தொல்லைதருகிறனே!

கிரு: விஜயனே! சற்று நாம் ஒதுங்கியிருக்க லாம்! அதோ! ஏகலைவன் இளைப்பாற வருகிறன்! நான் அவனைக் கனித்துக் கொள்கிறேன்!

(கிருஷ்ணனும் அருச்சுனனும் உள் சென்றுவிடுகின்றனர்.

எதிர்ப்புறத்தில் ஏகலைவனும் வனதத்த னும் வருகிறர்கள். வனதத்தன் சிரித்த படி இருக்கிறன்.)

ஏக: ஏன், வனதத்தா, இவ்வளவு சிரிப்பு? போர்க்களத்தில் மற்றவர்கள் கடுத்த முகத்துடன், கனல் சிந்தும் பார்வை யுடன் இருக்கும்பொழுது, நீ கண்களில் நீர்பெருகச் சிரித்துக்கொண்டு வருகி றயே!

வன: இங்கு போர் நடத்துகிறர்களா? அல் லது ஓட்டப்பந்தயம் நடத்துகிறர்களா? என்று எனக்குப் புரியவில்லை. நாம் போரை ஆரம்பிப்பதற்குள், அவர்கள் போரை முடித்துக்கொண்டு கலைந்துவிட் டார்களே!

ஏக; இல்லை, நண்பா! நாம் புகுந்த இந்தப பகுதியில் பாண்டவசேனை பின்வாங்கி விட்டது! ஆனல் கர்ணன் புகுந்த பக்கத் தில் உக்கிரமான சண்டை பெறுகிறது.

வன: உன்னுடைய அம்புகளுக்கு ஆற்றமல் பாண்டவ சேனை கலைந்தோடியதை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது. போரென்றல் பொரிகடலையென்று நினைத்து வந்தார்களா? அல்லது உல் லாச ஊர்வலம் என்று நினைத்தார்களா?

ஏக: அவர்கள் பின்வாங்கிப் போனதில் ஆச் சரியமில்லை. அருச்சுனன் நம் வழியி

லிருந்து விலகி ஒதுங்கிப்போனதுதான் ஆச்சரியமாக இருக்கிறது! அணிவகுப்பைப் பிளந்ததும், அருச்சுனன் இருக்கும் பக்கம்தான் விரைந்து சென்றேன்! அதற்குள் அவனுடைய தேர் வேறு பக்கம் திரும்பி மறைந்துவிட்டது! யாரைத் தேடிப் போர்க்களத்திற்குள் புகுந்தேனே அவன் விலகி மறைந்துவிட்டான்! அவன் ஒதுங்கிச் சென்றதும், ஓடுகிற மற்ற வீரர்களைப்பற்றி எனது கவனம் போய்விட்டது. நான் இங்கு வந்தது அந்தச் சாதாரணப் போர்வீரர்களிடம் என் வில் திறமையைக் காட்டவல்ல! புலிவேட்டைக்குப் புறப்பட்டவன் எதிரில் வரும் பூனைகளை விரட்டுவதில் திருப்தியடையமுடியாது!

வன : இதுவரை வேடர்கள் என்றால் காட்டுமிராண்டிகள், என்று அலட்சியம் செய்தனர். இன்று களத்தில் அந்தக் காட்டுமிராண்டிகள் முன் ஏதும் செய்யமுடியாமல் புறங்கொடுத்து ஓடினர். வேடுவர்களின் வீரம் இன்று நிலைநாட்டப்பட்டது, நிஷாதபுரத்துக்கொடி வானில் பெருமிதத்துடன் பறக்கவிடப்பட்டது, இனி ஏகலைவனின் வில் வீரத்தைப் பற்றிப் பேசாத வீரன் இருக்கமாட்டான்; புகழ் பரவாத நாடு இருக்காது! இதோ நான் போய், இன்று நீ அடைந்த வெற்றிச் செய்தியை நிஷாதபுரத்துக்கு அனுப்பி வருகிறேன்! அந்தச் செய்தி கேட்டதும் நிஷாதபுரத்து அரண்மனையில் வெற்றிக் கொண்டாட்டம் ஆடல்பாடல்களுடன் நடைபெறும்!

(போகிறான்)

(கிருஷ்ணனும் அருச்சுனனும் வெளிவருகிறார்கள். ஏகலைவன் அவர்களைப் பார்த்ததும் வில்லை வளைத்து நாணேற்றுகிறான். எதிரில் நிற்கும் இருவரும் மீண்டும் உள்ளே போய்விடுகிறார்கள். ஏகலைவன் வில்லை உயர்த்திக் குறிவைக்கும் பொழுது. திடீரென்று இருள் சூழ்கிறது. அடுத்து வெளிச்சம் வருகிறது. ஏகலைவனின் கையிலிருக்கும் வில்லின் நாண் அறுந்திருக்கிறது.)

ஏக : ஆ! இதென்ன; வில்லின் நாண் அறுந்துவிட்டது! (வில்லைப் பார்த்தபடி இருக்கிறான்.)

(மீண்டும் இருள் சூழ்கிறது. இருட்டில் "ஆ!" என்ற கூக்குரல் வருகிறது. வெளிச்சம் வரும்பொழுது ஏகலைவன் மார்பில் அம்பு பாய்ந்து இரத்தம் வடிகிறது.

மிக வேதனையுடன் தள்ளாடித் தள்ளாடி, அம்பைப்பிடுங்கி எறிந்து. கையால் மார்பை அழுத்திக்கொண்டு, ஏகலைவன் உட்காருகிறான்.)

(துரோணரும் கர்ணனும் வருகிறார்கள்.)

துரோ : ஏகலைவா! வெற்றி! வெற்றி! அபார வெற்றி!

கர் : நீ இன்று களத்தில் புகுந்ததும் யுத்தத்தின் போக்கு மாறிவிட்டது. உன் கடும் தாக்குதலால் பாண்டவ சேனை சிர் குலைந்து இருக்கிறது. இன்னும் இரண்டொரு தாக்குதலில் பாண்டவர் முழுத் தோல்வியடைவது நிச்சயம்! ஏகலைவா! உன்னைப்பற்றி முன்பே எனக்கு ஞாபகம் வந்திருந்து, போர் ஆரம்பிப்பதற்கு முன்பே உன்னை அழைத்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்!

ஏக : (எழுந்து நின்று) இப்பொழுதுகூட, ஏன் வந்தேன் தெரியுமா?

கர் : உனது குருவென நீ ஏற்றுக்கொண்டிருக்கும் துரோணருக்குத் துணையாக இருப்பதற்காக!

ஏக : துரோணர் எந்தப்பக்கத்தில் இருக்கிறார் என்பது எனக்கு யுத்தகளத்துக்கு வந்த பின்தான் தெயும். அவருக்கு நான் செலுத்தவேண்டிய காணிக்கையை முதலில் செலுத்திவிட்டேன்! உனக்காகத் தான் நான் இன்று வந்தேன்! அன்று, குருகுலத்தில் சேரமுடியாது மிகுந்த வருத்தத்துடன் திரும்பியபொழுது, மற்றவர்கள் என்னைப்பார்த்து வேடன், சூத்திரன், காட்டுமிராண்டி என்று வேதனைப் படுத்தியபொழுது, ஒருவன்தான் என்னுடன் வெளிவந்து, ஆறுதல் சொல்லி வழியனுப்பினாய்! நீ காட்டிய நல்ல தன்மைக்கு நன்றி சொல்லவில்லை, அந்த நன்றியை செயலில் காட்டவே இன்று வந்தேன்!

கர் : நண்பா! உற்றகாலத்தில் நீ வந்து செய்த உதவி என்றும் மறக்கக்கூடியதல்ல!

துரோ : உன் வில்லாற்றலால் கௌரவ சேனை நிச்சயம் வெற்றிவாகை சூடும்; உனக்கு

வில்வித்தை மேலும் வளர்வதாக என்று ஆசீர்வதிக்கிறேன்!

ஏக: குருதேவா! உங்களுடைய ஆசீர்வாதம் மிக நேரங்கடந்து வந்திருக்கிறது! வெற்றி யார் பக்கம் என்று என்னால் சொல்லி முடியாது! வீரர்கள் போராடுகிறார்கள், கடைசியில் சாவு இருவர் தலைப்பக்கத்திலும் வெற்றிக்கொடியை நாட்டிப்போகிறது!

(வனதத்தன் கையில் நீண்ட ஓலையுடன் வருகிறான்.)

வன: இதோ! வெற்றி ஓலையை எழுதிவிட்டேன்! இதைப் படித்ததும், நிஷாதபுரத்தில் உள்ளவர்கள் மகிழ்ச்சி கடலில் மூழ்கிவிடுவார்கள்!

ஏக: எங்கே, எனக்குப் படித்துக்காட்டு! மகிழ்ச்சியோ துக்கமோ அற்ற கடலில் மூழ்குமுன்பு நான் அதைக் கேட்டுப்போகிறேன்..

வன: (ஓலையை விரித்து)
"நிஷாதபுரத்து மக்களே! வெற்றிச் செய்தி! வெற்றிச் செய்தி! உங்கள் நாடு இன்று பெருமைக்குரியதாயிற்று! உங்கள் இளவரசனும், ஹிரண்யதனுஸ் குமாரனும், வீரர்களில் சிறந்தவனும், வில்வித்தையில் தன்னிகரற்றவனுமான ஏகலைவன் காட்டிய தீரம் மிகப் பெரிது! ஏகலைவனும், நானும் தேர்ந்தெடுக்கப்பட்ட வேடுவ வீரர்களும் யுத்த களத்தில் நுழையும்பொழுது, அங்கு அகோர யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது! பாண்டவ சேனையின் தாக்குதலுக்கு ஆற்றாமல், கௌரவ சேனை பின்னடையும் நேரம்! கௌரவர்கள் செயலறியாது திகைத்திருந்த சமயம்! அப்பொழுது இருண்ட வானில் விடிவெள்ளி தோன்றுவதைப்போல, மருண்டுகிடந்த கௌரவசேனையின் பக்கம் ஏகலைவன் சேர்ந்தான். சிறியதொரு தேரிலேறி தன் பெரிய வில்லை வளைத்தான்! தோல்வி வெற்றியாகியது! பின்வாங்குதல் முன்னேறித் தாக்குதலாகத் திரும்பியது! கடலலையில் கரைகிற மண் முட்டுகளைப் பார்த்திருக்கிறோம், பெருங்காற்றில் சிதறுகிற சருகுகளைக் கண்டிருக்கிறோம். ஆனால் இதைப்போன்று, வீரிட்டுவரும் அம்புகளுக்கு ஆளாகி சிதறி ஓடும் வீரர்களை நாம் பார்த்திருக்கமுடியாது! ஏகலைவன் வில் மேகம்போன்றிருந்து, ஒரு சமயம் மழையைப்போன்று அம்புகளைப் பொழிந்தது, மறுசமயம் மின்னல்போன்று பாய்ந்திடும் அம்புகளை அனுப்பியது வேறோர் சமயம் இடிமுழக்கத்தையும் தந்தது! வில்வீரன் ஏகலைவன், அவன் பெயர் குருக்ஷேத்திர யுத்தகளத்தை ஆட்டிவைக்கிறது. இனி பரதகண்டத்தை ஆட்டிவைக்கும்! அவன் புகழ் பரவாத நாடிருக்காது, பாடாத் புலவர்கள் இருக்கமாட்டார்கள்! ஏகலைவனின் வில்லாற்றலுக்கு எதிர்நிற்கமுடியாமல், பாண்டவர்களில் வில்வீரனாக விளங்கும் அருச்சுனனே ஓடிப்போய்விட்டானென்றால், ஏகலைவனின் வில்தீரத்தைப்பற்றி வேறென்ன சொல்லமுடியும்! நிஷாதபுரத்து மக்களே! வேடுவ வீரர்களே! வெற்றி கூறுங்கள்! வீரமுரசு கொட்டுங்கள்! உங்கள் நாட்டுக்கொடி இங்கு உயர்ந்து பறக்கிறது! போர் சீக்கிரம் முடியும், வெற்றி வாகை சூடிவருவோம்!

ஏக: போர் சீக்கிரம் முடியும்! வெற்றிவாகை சூடி வருவோம்! (சிரித்துக்கொண்டு) மேற்கொண்டு!

வன: போர்ச்செய்தி அவ்வளவுதான்!

ஏக: இல்லை, அதற்கு மேற்கொண்டும் இருக்கிறது! போர்முனையில் ஏகலைவனின் வில்லிற்குமுன் நிற்கமாட்டாமல் பாண்டவவீரர்கள் அருச்சுனன் உட்பட, ஓடினார்கள்! போர் முடிந்தது! ஏகலைவன் தனியனாக வந்து அமர்ந்தான். நடுப்பகல். அப்பொழுது திடீரென்று இருள் சூழ்ந்தது! ஏகலைவன் வில்லின் நாண் அறுக்கப்பட்டது! மீண்டும் இருள்! ஆயுதமற்ற ஏகலைவன்மீது, இருளின் மத்தியில், அம்புகள் வீசப்பட்டன!

வன: வேடிக்கையாகயிருக்கவேண்டுமென்று இப்படியெழுதியனுப்பினால், எல்லாவற்றையும் கதையென்று நினைத்துவிடுவார்கள்!

கர்: கதையென்றாலும் அதற்கும் காரணம் இருக்கவேண்டும்! நடுப்பகல் அப்பொழுது இருள் சூழ்ந்தது என்றால் எப்படி நம்புவார்கள்!

துரோ: ஏகலைவன் வில்லைப் பிடிப்பதில் மட்டுமல்ல, கற்பனை செய்வதிலும் தீரன் போலிருக்கிறது.

ஏக: சற்றுப் பொறுங்கள்! வீசப்பட்ட அம்புகளில் ஒரு அம்பு, ஏகலைவன் மார்பில் ஆழப் பாய்ந்துவிட்டது! அதை அவன் பிடுங்கினான் இரத்தம் பீரிட்டு வழிந்தது! (அம்பைப் பிடுங்குவதுபோல, கையை எடுக்கிறான். இரத்தம் வழிகிறது.)

வன: ஐயோ! இதென்ன? (எல்லோரும்

போய் அவனைப் பிடித்துக்கொள்கிறார்கள்.)

கர் : ஏதோ கதை சொல்லுகிறான் என்று நினைத்தேன் அது உண்மையாகவே இருக்கிறது!

வன : யார் செய்த சூழ்ச்சி இது! துரோணரே! உமக்கு ஏதாவது தெரியுமா? ஏகலைவனுக்கு ஏதாவது ஆபத்து என்றால் அது உம்மால்தான் வந்திருக்கமுடியும்!

துரோ : ஐயோ! நானொன்றும் அறியேன்! ஏகலைவன் அடைந்த வெற்றி கேட்டு, நானும் கர்ணனும் ஒன்றாக வந்தோம்!

கர் : நாணறுந்த வில், இதோ கிடக்கிறது! ஒடிந்த அம்பு இரத்தம் தோய்ந்து, இதோ! ஏகலைவன் சொல்லிய கதை சரியாக இருக்கிறது!

ஏக : குறைந்த விரல், அறுந்த வில், ஒடிந்த அம்பு, சிந்திய இரத்தம், இவைதாம் ஏகலைவனின் கதை!

துரோ : ஏகலைவா! என்ன நடந்தது, சொல்? எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை!

ஏக : குருதேவரே! நான் ஏகலைவனா? அல்ல, அல்ல! யாரோ வேடன், காட்டுமிராண்டி, சூத்திரன்!

"போ! உனக்கு இந்த குருகுலத்தில் இடம் டையாது!" ஏகலைவன் துரத்தப்பட்டான்.

"வில்வித்தை கற்றுக்கொண்டாயா? அப்படியானால் வா! குருவுக்குத் தரவேண்டிய காணிக்கையாக உன் கட்டைவிரலைத்தா!" அவனுடைய கட்டைவிரல் வாங்கப்பட்டது!

கட்டைவிரலை யிழந்ததும், அவன் வில்வீரம் குறையவில்லை! ஆதலால் போர் என்றதும், உதவிக்கு அழைக்கப்பட்டான்! அவனும் சென்றதை நினைக்காமல், உதவிக்கு வந்தான்!

போர் முனையிலும் அவனை விற்போரில் எதிர்ப்பார் இல்லை! மறைமுகமாகவேத் தாக்கப்பட்டான்! வீரத்தை வீரத்தால் எதிர்க்கவில்லை, வீரத்தை சூழ்ச்சிகொண்டு எதிர்க்கிறார்கள்!

வன : நண்பா! சற்றுப் பேசாமலிரு!

ஏக : எட்டி நில்லுங்கள்! (மனப்பிரமையுடன்) இரவு வந்துவிட்டது! அதோ! மின்னுகின்ற நட்சத்திரங்கள்! எடு என் வில்லை! சாவு அதோ! கருமேகமாக வருகிறது! அதையும் எதிர்த்து நிற்கிறேன்! பார்! நான் வில்லை எடுத்ததும் அதுவும் திரும்பிப்போகிறது! இல்லைப் பதுங்கிவருகிறது! எல்லாம் சூழ்ச்சிதான்!

வன : ஐயோ! ஏன் அப்படிப் பார்க்கிறாய்?

ஏக : அந்த நட்சத்திரங்கள் என்னைக் கூப்பிடுகின்றன! சரி! வருகிறேன்! நான் போகிறேன்! குருதேவரே! நான் செலுத்த வேண்டிய காணிக்கை பாக்கி இல்லையென்று நினைக்கிறேன்! கர்ணா! உதவியென்றதும் வந்தேன்! என்னால் அவ்வளவுதான் முடிந்தது! நண்பா! வனதத்தா! இதையும் சேர்த்து உன் வெற்றிச் செய்தியில் அனுப்பு! ஏகலைவனை வில் கொண்டு எதிர்ப்பார் எவருமில்லை; சூழ்ச்சி செய்தே சாய்த்தார்கள்! ஏகலைவன் ஒரு வேடன், காட்டுமிராண்டி, சூத்திரன்; ஆனால் அவன் வீரனாக, கண்ணியம் மிகுந்தவனாக, சுத்த இருதயமுடையவனாக இருந்தான் என்று!

(சாய்கிறான்)

(துரோணரும், கர்ணனும் அவனருகில் போய்த் தொட்டுப்பார்க்கிறார்கள், வனதத்தன் வெறித்துப் பார்த்தபடி இருக்கிறான்.)

கர் : உயிர் பிரிந்துவிட்டது!

துரோ : ஒப்பற்ற வீரன்! குருக்ஷேத்திர யுத்தத்தை மாற்றியமைக்கும் வில்வீரன் போய்விட்டான்!

வன : இன்று அவன் பிணத்தின் மீது புகழ்மாலை சூடுகிறீர்கள்! அன்று அவன் வந்தபொழுது விரட்டியடித்தீர்கள்!

கர் : கௌரவ சேனைக்கு ஏற்பட்ட குதுகலம் இன்னும் நீங்கவில்லை. அதற்குள் ஏகலைவன் இறந்துவிட்டான் என்ற செய்தி போனால், களத்தில் சிந்தப்பட்ட இரத்தத்தைவிட வடிக்கப்படும் கண்ணீர் அதிகமாகிவிடும்!

துரோ : ஏகலைவன் இறந்த செய்தியை வெளியிடாமல் வைத்திருப்போம்!

கர் : அதுதான் நல்லது! வனதத்தா! இனிக் கலங்குவதில் பயனில்லை! வா! ஏகலைவனின் பிணத்தை எடுத்துச் செல்லலாம்!

வன : (சிரித்துக்கொண்டு) ஏகலைவனின் பிணத்தை வனதத்தன் சுமந்து சென்

ருன் என்ற பேச்சு வரவேண்டுமா? ஏகலைவன், வனதத்தன் இருவருடைய பிணங்களையும் மற்றவர்கள் தூக்கிச் சென்றார்கள் என்ற செய்திதான் வரும்! ஏகலைவன் இறந்ததும் வனதத்தன் உயிர் வாழ்ந்தான் என்று இருக்கமுடியாது! இதோ! நானும் போகிறேன், போர்க்களத்திற்கு! எந்த சூழ்ச்சி, எந்த வஞ்சகம், ஏகலைவனைச் சாய்த்ததோ அது என்னையும் சாய்க்கட்டும்! நான் பிணமானதும், எங்கள் இருவர் பிணத்தையும் நிஷாதபுரத்துக்கு அனுப்பிவிடுங்கள்! காட்டில், அருவிக்கரையோரத்தில், புல்வெளியில், நாங்கள் இருவரும் சிறுவயதில் விளையாடிப் பழகிய இடத்தில், எங்கள் பிணங்களைப் புதைக்கச் செய்யுங்கள்! (பிணத்தைப் பார்த்து) நண்பா! உன்னை என்றும் இணைபிரியாதிருந்த என்னைக் கடைசியில் தனியாக விட்டுச் சென்றாய்! சிறிது நேரத்திற்குள் நானும் வந்து விடுகிறேன்!

(ஓடுகிறான்.)

கர் : குருக்ஷேத்திர யுத்தகளத்தில் சிந்தப்பட்டதில் மிகத் தூய்மையான இரத்தம் இங்கே சிந்தப்பட்டிருக்கிறது! ஏகலைவன் உயர்ந்த வீரன், சிறந்த பண்புடையவன்! வீரம் அவனை உயர்த்தியது, வீரத்தை உயர்த்தத்தன்னை அவன்என்றும் தாழ்த்திக்கொண்டதில்லை! குரு இல்லாமல் வித்தை கற்றான், கட்டைவிரல் இல்லாமல் விற்போர் புரிந்தான்! காட்டில் அன்று கட்டைவிரலைக் காணிக்கை தந்தான், களத்தில் இன்று உயிரையே காணிக்கையாக்கிவிட்டுச் சென்றான்! வீரத்துக்கும், வில்வித்தைக்கும், பண்புக்கும், கண்ணியத்துக்கும் அவன் தந்த காணிக்கை பெரிது! இன்று அவன் இறந்துவிட்டான், மறுபடியும் இவனைப்போன்று முயற்சியில் தளர்வடையாத வீரன் வருவாரோ! துரோணாச்சாரியாரே! வாரும் பிணத்தை எடுத்துச் செல்லலாம், களத்தில் மற்ற வீரர்கள் காணும் முன்பு!

(கர்ணன் தலைப்பக்கத்திலும், துரோணர் கால்பக்கத்திலும் பிடித்துப் பிணத்தைத் தூக்கிச்செல்லுகிறார்கள்.)

(கிருஷ்ணனும் அர்ச்சுனனும் வெளி வருகிறார்கள்.)

கிரு : அருச்சுனா! பார்த்தாயா, அந்த ஏகலைவனைச் சாய்ப்பதற்கு எவ்வளவு உபாயங்களைக் கையாளவேண்டியிருந்தது!

அரு : ஏகலைவனை எதிர்த்துநின்று வெற்றி பெறமுடியாதென்று தாங்கள் முதலில் சொன்னபொழுது நானும் திகைத்துப் போனேன்!

கிரு : முன்பு நான் சொன்னபடி, ஏகலைவன் வில்வித்தையில் ஈடு இணையற்றவன். ஏகலைவன் கட்டைவிரலும் இருந்து, அவன் கையில் சரியான வில்லும் இருந்தால், தேவர்களும், அசுரர்களும் ஒன்றுகூடி எதிர்த்தால்கூட அவனை வெல்லுதற்கு முடியாது. கட்டை விரல் போனபின்னும், அவன் எவ்வளவு தீரனாக இருந்தான் என்பதை, நீயே நேரில் கண்டாயே! அவனை வில்வித்தையில் உன்னால் வெல்ல முடியாது என்று தெரிந்ததும், சூழ்ச்சியால்தான் வெல்லமுடியும் என்று திட்டமிட்டேன்! நம்மைக் குறிவைத்து ஏகலைவன் வில்லைத் தூக்கியதும், அவன் கண்ணை மறைக்க அடர்ந்த புழுதியை இருளைப்போன்று எழுப்பினேன். அவனோ இருட்டில் கூட, குறிதவறாது அம்புகளை வீசுவதில் வல்லவனாயிருந்தான். இருளின் மத்தியில், பூனைபோலப் பதுங்கிச்சென்று அவன் நாணை அறுத்துவிட்டேன். கட்டைவிரல் போனாலும் அம்பை விடலாம், வில்லின் நாண் அறுந்தால் என்ன செய்யமுடியும்? அவன் திகைத்து நின்ற நேரத்தில், மறுபடியும் புழுதியைத் தூவி, அவன்மீது அம்புகளைப் போகச் செய்தேன்! ஏகலைவன் இறந்தான்!

அரு : நிராயுதபாணியாக இருந்த அவன்மீது அம்புபோடுவது யுத்த தர்மமா?

கிரு : அதைப்பற்றி நீ கவலைப்படாதே, பார்த்திபா! நான் உனக்குச் செய்த கீதோபதேசப்படி, யுத்தகளத்தில் மற்றவற்றை மறந்து, யுத்தம் ஒன்றையே மனதில் வைக்கவேண்டும். உபாயத்தில் ஏகலைவனை வீழ்த்தியிராவிட்டால், வேறு எவ்வகையிலும் வீழ்த்தியிருக்க முடியாது. வா, போகலாம்! இனி கர்ணன் இருக்கிறான்! அவனை வெல்வதற்கும் நான் ஒரு உபாயம் கண்டுபிடிக்கிறேன் வா!

அரு : (பின்தொடர்ந்து) பிரபு! வருகிறேன். கண்ணன் காட்டிய வழியில் செல்பவன் தானே நான்!

(போகிறார்கள். திரை விழுகிறது.)

(முற்றிற்று)

வினாவும் விளக்கமும்

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களும், அவரது திராவிடக் கழகமும் சட்ட மன்ற இடைக்காலத் தேர்தல்களில் நிபந்தனை ஏதுமின்றிக் காங்கிரசை முழுக்க முழுக்க ஆதரிக்க முன்வந்ததுபோல, திராவிட முன்னேற்றக் கழகமும் இனி ஆதரிக்க முன்வருமா ?

பெரியார் இராமசாமி அவர்களின் கொள்கைகளையும், திட்டங்களையும், நடவடிக்கைகளையும் முழுக்க முழுக்க அப்படியே ஆதரிக்க வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடப்பாடு அல்ல. கடப்பாடு அப்படித்தான் இருக்கவேண்டும் என்று யாரேனும் எண்ணிக்கொள்வார்களேயானால், அது அத்தகையோரின் எண்ணத்தில் ஏற்பட்ட தவறு என்பதை அவர்கள் உணர்தல் வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் தனி அமைப்பாக இயங்குவதிலிருந்தே, அது பெரியார் இராமசாமி அவர்களை முழுக்க முழுக்கப் பின்பற்றவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம் !

பெரியாரின் கொள்கை—நோக்கம்—போக்குகளில் சிலபல (எல்லாமும் அல்ல) ஏற்புடைத்தனவாக இல்லாத காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் பெரியாரை விட்டுப் பிரிந்தார்கள். இதனால் தி. மு. கழகத்தார் பெரியாரின் கொள்கை—நோக்கம்—போக்குகளில் நூற்றுக்கு நூறு வேறுபட்டு விளங்குகிறார்கள் என்று பொருளாகிவிடாது. தி. மு. கழகம், பெரியாரின் கொள்கைகளில் ஏற்புடைத்தானவற்றை ஏற்கவும், ஏற்புடைத்தாகாவற்றை ஒதுக்கிவிடவும் ஆன கொள்கையில் நின்று, தன்னுடைய பணிகளைத், தானே, மக்களாட்சிப் (ஜனநாயக)பண்புமுறையில் சிந்தித்துச் செவ்வனே செயலாற்றிவருகிறது. பெரியாரின் கொள்கைகளில் சில பொருந்தி வருகின்றன ; வேறு சில பொருந்தி வருவதில்லை. பொருந்தி வருகின்றனவற்றைத் தி. மு. கழகத்தார் ஏற்றுக்கொள்கிறார்கள் ; பொருந்தி வராதவற்றை ஏற்றுக் கொள்வதில்லை.

தி. மு. கழகத்தவர்கள் சிலபொழுது பெரியார் அவர்களைத் தந்தையென்றும், தலைவர் என்றும் கூறுகிறார்களே என்றால்; அவரிடத்தில் காணப்படும் திராவிடநாட்டைத் தனி நாடாக ஆக்குதல், வடநாட்டு—வெளிநாட்டுச் சுரண்டல் ஆதிக்கத்தை ஒழித்தல், இந்தி ஏகாதிபத்தியப் படையெடுப்பைத் தடுத்தல், மதம்—கடவுளின் பேரால் நிகழும் குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கவழக்கங்களை ஒழித்துப் பகுத்தறிவு நெறியைப் பரப்புதல் போன்ற கொள்கைகள் தி. மு. கழகத்தார்க்கு ஏற்புடைத்தனவாக இருக்கும் காரணத்தாலும், விட்டகுறை தொட்டகுறை உரிமை—உறவு—உள்ளன்பு கொண்டிருக்கும் காரணத்தாலும் அவ்வாறு அழைக்கிறார்கள் என்றுணர வேண்டும். அவரைத் தலைவர் என்று அழைப்பதிலோ, சிலபொழுது சில பிரச்சினைகளில் அவரது எண்ணம் என்ன என்று அறிவதிலோ தவறு ஏதும் இல்லை; விட்ட குறை தொட்டகுறை உரிமை இருக்கிறது. அவரைத் தலைவர் என்று அழைப்பதற்குக் காரணம் ஒத்துவருகிற சிலபல கொள்கைகளை பரப்பிய முதல்வர்—அந்தக் கொள்கைகளுக்கு வழி காட்டிய முதியவர் என்பதற்காகவேயாகும்; அவரை நூற்றுக்கு நூறு அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றவேண்டும் என்ற கருத்தில் அல்ல. பெரியார் அவர்கள் பிறர் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், தாமே சிந்தித்துப் பார்த்துத், தமக்கு ஒத்துவருவனவற்றை மட்டுமே எப்படி ஏற்றுக்கொள்கிற கொள்கையைக் கொண்டிருக்கிறாரோ, அப்படியேதான் திராவிட முன்னேற்றக் கழகமும் பெரியார் அவர்களின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் தானே சீர்தூக்கிப் பார்த்து ஒத்துவருவனவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ள முனைகிறது.

திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியிலுள்ள இரண்டு குழல்கள் போன்றவைகள் என்று

தி. மு. க. பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாவும், பிறரும் கூறுகின்றனரே என்றால், மேலே சுட்டிக்காட்டியுள்ளபடி ஒத்துவருகிற சிலபல கொள்கைகளைப் பொறுத்த அளவில் தான் கூறுகின்றனர் என்று அறிதல் வேண்டும். பெரியார் எந்த ஒரு செயலைச் செய்தாலும், உடனே, "திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் அந்தச்செயலை ஆதரிக்கவில்லை, இந்தச் செயலை ஆதரிக்கவில்லை?" என்று கேள்வி கேட்கும் மனப்போக்கினர் மேற்கண்ட உண்மைகளை முதற்கண் உணர்ந்துகொள்ள வேண்டும்.

திராவிடக் கழகத்தைப் பொறுத்தவரையில் பெரியார் அவர்கள் எடுக்கும் முடிவுதான் கழகத்தின் முடிவு; தி. க.வைச் சேர்ந்தவர்கள் அதனைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற வேண்டும். தி. மு. க.வைப் பொறுத்தவரையில் பொதுக்குழு எடுக்கும் முடிவே கழகத்தின்முடிவு; தி. மு. க.வைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க முழு உரிமையும் பெற்று, மக்களாட்சிப் பண்பிற்கு ஏற்ப நடக்கக் கடமைப்பட்டவர்கள். இந்த வேறுபாட்டையும் வினா எழுப்புவோர் விளங்கிக்கொள்ளவேண்டும்.

நிபந்தனை ஏதும் இன்றிக் காங்கிரசைத் தேர்தலில் ஆதரிப்பது என்ற பெரியாரின் கொள்கை, தி. மு. க. வின் பொதுக்குழு முடிவுக்கு மாறுபட்டதாகும்; எனவேதான் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் தி. மு. க. பெரியாரின் கொள்கையை ஆதரிப்பதாக இருக்காது. திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கையை ஏற்றுக்கொள்கிற அரசியல் கட்சியோடுதான் சட்டமன்ற—பாராளுமன்றத் தேர்தல் பற்றிய கூட்டுமுயற்சிப் பேச்சு நடத்த தி. மு. கழகம் முற்படுமேயொழிய, அவ்வித நிபந்தனையை ஏற்றுக்கொள்ள மறுக்கிற எந்த அரசியல் கட்சியோடும் தேர்தல் தொடர்பு கொள்ளாது. அந்தபபடிக்குப் பார்த்தால், காங்கிரசு திராவிடநாட்டுப் பிரிவினைக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாது என்பது மட்டுமல்ல, திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கையை எதிர்த்துப் போராடிவரும் கட்சியாகும். எனவே அந்தக் காங்கிரசை, விழுந்தடித்துக்கொண்டுபோய்த் தேர்தலில் ஆதரிக்கும் போக்கைத் தி. மு. கழகம் ஒருநாளும் கொள்ளாது.

சென்ற பொதுத்தேர்தலில் திராவிடக் கழகம், கம்யூனிச்ட்டுக் கட்சியை நிபந்தனை ஏதும் இன்றி முழுக்க முழுக்க ஆதரித்தது. ஆனால் தி. மு. கழகத்தின் நிபந்தனைகளைக் கம்யூனிச்ட்டுக் கட்சி ஏற்க மறுத்ததால், தி. மு. கழகம் தனது ஆதரவையும் கட்சிமுறையில் நல்க மறுத்தது. திராவிடக் கழகம் கம்யூனிச்ட்டுக் கட்சியை எவ்வளவுக்கெவ்வளவு முழுக்க முழுக்க சென்ற பொதுத்தேர்தலில் ஆதரித்ததோ, அவ்வளவுக்கவ்வளவு பொதுத்தேர்தலுக்குப் பின்னால் வெறுத்தொதுக்கத் தலைப்பட்டது; பாராட்டிய அளவுக்குப் பிற்பாடு வசைபாடவேண்டி ஏற்பட்டது. சென்ற பொதுத்தேர்தலில் தி. கழகம் காங்கிரசை எவ்வளவுக்கெவ்வளவு வெறுத்ததோ அவ்வளவுக்கவ்வளவு, இடைக்காலத் தேர்தல்களில் காங்கிரசை முழுக்க முழுக்க ஆதரிக்கக்கிளம்பி விட்டது. ஆனால் காங்கிரசு, கம்யூனிச்ட்டு ஆகிய கட்சிகள் தங்கள் தங்கள் கொள்கைகளையும், திட்டங்களையும் சென்ற பொதுத்தேர்தலின்போது வைத்திருந்தது போலவேதான் இப்பொழுதும் வைத்திருக்கின்றன. மாறுதல் அவைகளிடத்திலல்ல, திராவிடக் கழகத்திடத்துதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். தி. மு. கழகம் அத்தகைய மாறுதல்களுக்குத் தன்னைத்தானே உள்ளாக்கிக்கொண்டு, விழுந்தடித்து ஓடிப்போய்ப், பிற கட்சிகளின் பின்னால் நின்று, தேர்தலில் அவைகளை முழுக்க முழுக்க ஆதரிக்கும் போக்கைக் கொள்ளாது; கொள்ள பொதுக்குழுவினர் விடமாட்டார்கள். அந்தப் பிற கட்சிகளும் தி க., தி. மு. க.வைப்பொறுத்து அத்தகையப்போக்கை எந்த ஒரு நடவடிக்கையிலும் மேற்கொள்வதில்லை என்பதை ஊன்றிக் கவனித்தால், நாம் கொள்ளவேண்டிய கொள்கை இனிது விளங்கும்.

❖ ❖ ❖

பெரியார் சர்வாதிகாரப் போக்குடையவர் என்று கருதும் தி. மு. கழகத்தவர்கள், நாடகத் திருத்த மசோதாவால் ஏற்படும் வினாவுகளைப் பொறுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பொதுச்செயலாளருக்கு முழு அதிகாரம் அளிக்கிறது பொதுக்குழு, என்ற கருத்தமைந்த வேலூர்ப் பொதுக்குழுத்தீர்மானம் எப்படிச் சனநாயகப் பண்பிற்குப் பொருந்தி வருவதாகும்?

'சர்வாதிகாரம்' என்றால் அதிகாரம் ஒருவரிடம் குவிவதற்குப் பெயர் என்றும், 'சனநாய

கம்' என்றால் அதிகாரத்தை ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் பரிமாறிக்கொள்வது என்றும் நினைத்துக்கொள்ளும் குறையறிவுடையோரே, மேற்கண்ட கேள்வியை எழுப்புகின்றனர்.

அதிகாரம் ஓரிடத்தில் குவிகிறதா அல்லது பலரிடத்திலும் பரவி நிற்கிறதா என்பதைப் பொறுத்தல்ல, அதிகாரம் எப்படிப் பெறப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் 'சர்வாதிகாரம்' என்றும் 'சனநாயகம்' என்றும் பெயர்கள் இட்டு அழைக்கப்படுகின்றது. அதிகாரத்தை வகுத்து எடுத்துக்கொள்ளும் உரிமையை, ஒரு குழுவில் இணைந்திருக்கும் ஒருவர் தாமே எடுத்துக்கொண்டு, அந்தக் குழுவிலுள்ள பிறர்க்கு அந்த உரிமை இல்லை என்று மறுத்து, ஆதிக்கம் செலுத்துவாரே யானால் அந்தப் பண்பிற்குச் 'சர்வாதிகாரம்' என்றும், ஒரு குழுவில் இணைந்திருக்கும் பலரும் ஒத்த உரிமையோடு விளங்கி, அதிகாரத்தைப் பெரும்பான்மையான வாக்குகளால் வகுத்து, அதனைக் குறிப்பிட்ட ஒருவரிடமோ அல்லது ஒரு சிலரிடமோ அல்லது ஒரு சிறு குழுவினிடமோ பெரும்பான்மையான வாக்குகளால் ஒப்படைக்கும் பண்பிற்குச் 'சனநாயகம்' என்றும் பொதுவாகக் கூறுவர். அந்தப் படிக்குப் பார்த்தால், பேரூரில் கூடிய தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள், நாடகத் திருத்தச் சட்ட மசோதா தி. மு. கழகத்தைத் தீண்ட முனையும்போது அவசியமான நடவடிக்கைகளைக் கிளர்ச்சியின் மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ அல்லது இரண்டின் மூலமோ எடுக்கும் முழு உரிமையைப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்படைத்ததானது, சனநாயகப் பண்பே ஒழிய, சர்வாதிகாரப் பண்பு ஆகாது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்து முழு உரிமையும் ஒப்படைக்கப்பட்டாரே ஒழிய, அவரே முழு உரிமையையும் எடுத்துக்கொள்ளவில்லை. பொதுக்குழு உறுப்பினர்களும் எல்லா உரிமைகளையும் எப்பொழுதும் பொதுச்செயலாளருக்கு ஒப்படைத்துவிட்டோம் என்று கூறிவிடவும் இல்லை. இது சனநாயகப் பண்புக்கு மாறுபாடானது என்று அறிவுக் குருடரைத்தவிர வேறு எவரும் கூறுரே!

பெரியார் இராமசாமி அவர்கள், சர்வாதிகாரம் படைத்தவர் என்று கூறப்படுகிறார் என்றால், அதற்குக் காரணம் அவர் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் முழு உரியையை எடுத்துக்கொள்பவர்; பிறர் சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்த்துக் கொடுக்கப், பெறுபவர் அல்லர். அவர் சனநாயகப் பண்பிற்கு எப் பொழுதும் மதிப்பு கொடுத்ததில்லை; தாம் ஒரு சர்வாதிகாரி என்று கூறிக்கொள்ளத் தயங்குவதுமில்லை.

பெரியார் அவர்கள், தம்க்கு முட்டாள்களே தேவை என்றும், தம்மைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுபவர்களாகவே அவர்கள் எல்லோரும் இருக்கவேண்டும் என்றும் கூறு பவர். அறிஞர் அண்ணா அவர்கள், தமக்கு அறிவுபடைத்தோரின் நட்புறவே தேவை என்றும், சிந்தித்துச் செயலாற்றும் செயல் வீரர்களாலேயே கழகம் கட்டிக் காக்கப்பட வேண்டும் என்றும் கூறுபவர். பெரியார் அவர்களின் விருப்பத்திற்கேற்ப உறுப்பினர் கள் நடக்கவேண்டும் என்பது திராவிடக் கழகத்திலுள்ள நிலைமை; ஆனால் பெரும்பா லான உறுப்பினர்களின் விருப்பமான முடி வுக்கு ஏற்ப அறிஞர் அண்ணா அவர்கள் நடக்கவேண்டும் என்பது திராவிட முன்னேற் றக்கழகத்திலுள்ள நிலைமை. இவற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம், சர்வாதிகாரம் எங்கே தாண்டவமாடுகிறது, சனநாயகம் எங்கே தாண்டவமாடுகிறது என்பவைகளை! புரிந்து கொண்டோர் மேற்கண்ட கேள்வி போன்ற வைகளைக் கேட்க முன்வரமாட்டார்கள் என் பது மட்டும் உறுதி!

"மன்றம்" வளர்ச்சிக்கு நன்கொடை

நாமக்கல் பொதுக்கூட்டத்தில்	ரூ.	2 0 0
நன்செய் இடையாறு ,,	,,	1 0 0
மஞ்சநாய்க்கன்பட்டி தி. மு. க.	,,	1 9 0
பழனி பொதுக்கூட்டத்தில்	,,	1 9 0
பொள்ளாச்சி பவுன்மார்க் பீடித் தொழிலாளர்கள்	,,	1 0 0
சென்னை மீர்சாபேட்டை தி. மு. க.	,,	15 0 0

நன்கொடை அளித்தோர்க்கு எம் உளம் கனிந்த நன்றி!

—ஆசிரியர்.

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்		6—0—0	7—8—0
ஆறு திங்கள்	,,	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0—5—0

தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

கோட்டுக்கு அளவு எடுக்கும் முறை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



(6) மார்புச் சுற்று அளவு

படத்தில் காட்டியுள்ளபடி 8-வது எண்ணுக்குச் சிறிது மேலே (அம்புக்குறி காட்டியுள்ளபடி) மார்பைச் சுற்றி எடுக்க வேண்டும்.

மார்புச் சுற்று அளவு என்பது, மார்பையும், முதுகையும் சுற்றி எடுப்பதாகும். இஞ்ச்டேப்பை இறுக்கியோ அல்லது தளர்த்தியோ பிடிக்கக்கூடாது, இஞ்ச் டேப்பை அக்குளுக்குச் சிறிது கீழ்ப்படுத்தி, மார்புகளுக்குச் சற்று மேலே எடுக்க வேண்டும். முதுகுப்புறத்தில் டேப் கீழே நழுவிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(7) இடுப்புச் சுற்று அளவு

படத்தில் காட்டியுள்ளபடி 9-வது எண்ணுக்குச் சிறிது மேலே (அம்புக்குறி காட்டியுள்ளபடி) எடுக்கவேண்டும். இடுப்புச் சுற்று அளவு என்பது, இடுப்பைச் சுற்றிலும் எடுப்பதாகும். இயற்கையாக அமைந்துள்ள இடுப்புப் பள்ளத்தைச் சுற்றி, இஞ்ச்டேப்பை இறுக்கியோ அல்லது தளர்த்தியோ பிடிக்காமல் இடுப்புச் சுற்று அளவு எடுத்துக்கொள்ளவும்.

(8) புட்டம் சுற்று அளவு

படத்தில் காட்டியுள்ளபடி 10-வது எண்ணுக்குச் சிறிது மேலே (அம்புக்குறி காட்டியுள்ளபடி) புட்டத்தைச் சுற்றி எடுக்கவேண்டும்.

புட்டம் சுற்று அளவு என்பது, இயற்கை இடுப்புக்கு கீழே $7\frac{1}{2}$ அங்குலம். அல்லது $8\frac{1}{2}$ அங்குலம் இறக்கி புட்டத்தைச் சுற்றி அளவு எடுக்கவேண்டும்.

(A) 1-ல் இருந்து A வரை சேர்வாணி அல்லது மார்னிங் கோட் அளவு எடுப்பதைக் குறிக்கும்.

(B) 1-ல் இருந்து B வரை டிரஸ் கோட் அளவு எடுப்பதைக் குறிக்கும்.

(C) 1-ல் இருந்து C வரை ஓவர்கோட் அளவு எடுப்பதைக் குறிக்கும்.

Regd. No. M 6296

MANRAM

நறுமண சீயக்காய் தூள் • REGD No. 13817.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :-வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபிர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாடி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

நம் நாடு

[தி மு. க. வின் ஒரே நாள் இதழ்]

ஆசிரியர் : அறிஞர் அண்ணாதுரை

தி. மு. க. கிளைகளும், தி. மு. க. தோழர்களும் "நம்நாடு" வாங்குவதைத் தமது கடமைகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதுவார்களாக !

"நம் நாடு" வளர்ச்சியே கழக வளர்ச்சி என்பதைக் கழகத் தோழர்கள் உணர்வார்களாக !

இன்றே "நம் நாடு"விற்குச் சந்தாதாரராகச் சேருங்கள் !

ஆண்டுக் கட்டணம்	ரூ.	24—0—0
ஆறு திங்கள் ,,	ரூ.	12—0—0
தனி இதழ்	ரூ.	0—1—0

நிர்வாகி, "நம் நாடு",
'அறிவகம்'
இராயபுரம் :: சென்னை-13.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS.